Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

THAMPI links with LIONAIR

உங்களின் சௌகரியமான பயணத்திற்குப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட

BRITISH AEROSPACE HS 748 Aircraft...........

ROLLS ROYCE ENGINES...........

SAFETY & COMFORT........

WARM HOSPITALITY.........

Tickets Available For RS. 1999/-

விசாரணைகளுக்கு அழையுங்கள்....

01-343125

021-2222504

Hotline - 0777-382343, 072-401423.

(சி-052)

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 3 ஆம் நாள் (20.10.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 20

## தமிழ்க்கூடல் நிகழ்வுகள் நேற்று சிறப்புற ஆரம்பம்; வீரசிங்கம் மண்டபம் பங்கேற்பாளர்களால் நிறைந்தது!

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம், நிதர்சனம் நிறுவனம் மற்றும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடாத்தும் 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது. யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற ஒன்றுகூடலின் முதல் நாள் அமர்வில் தமிழகத்திலிருந்து வருகை தந்த - விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் தமிழக சட்டசபை உறுப்பினருமான இரா.திருமாவளவன், கவிஞர் இன்குலாப், 'காற்றுக்கென்ன வேலி' திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், ஓவியர் மருது, எழுத்தாளர் ப.செயப்பிரகாசம் ஆகியோரும் பேராசிரியர் சிவத்தம்பி, அமைச்சர் மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் ஆகியோரும் சுரேஸ் பிரேமச்சந்திரன், சீ.வி.கே.சிவஞானம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழர் தாயகத்திலிருந்தும், தென்னிலங்கை, ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிலிருந்தும் அறிஞர்களும், படைப்பாளிகளும்

(10 ஆம் பக்கம் பார்க்க)



மானுடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகியபோது யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் கொடியேற்றப்பாடல் இசைப்பதையும், தேசியக் கொடிக்கு போராளிகள் கொடிவணக்கம் செலுத்துவதையும், போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்கள், பொதுமக்களுக்கு தமிழகப் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்துவதையும் விழா மேடையில் சிறப்புரையாற்றிய நிலாந்தன், சீ.வி.கே.சிவஞானம், பேராசிரியர் கா.சிவத்தம்பி, இளம்பரிதி, புதுவை இரத்தினதுரை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். *(மேலும் படங்கள் 2,4,9 பக்கங்களில்)*

## நோர்வே சமாதானத் தூதுக்குழு இன்று கொழும்புக்கு வருகிறது!

(கொழும்பு)

**இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாக அரசு - புலிகள் உயர் மட்டத் தலைவர்களைச் சந்திக்கும் பொருட்டு நோர்வே சமாதானக் குழுவினர் இன்று கொழும்பு வருகின்றனர்.**

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஆகியோர் இன்று கொழும்பு வருகின்றனர்.

இவர்கள் நாளை நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்குடன் இணைந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளனர்.

நாளை மறுதினம் இவர்கள் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்களைச் சந்திக்கவுள்ளனர். அன்று மாலையில் முதற் தடவையாக இவர்கள் யாழ்ப்பாணம் வருகின்றனர். புதனன்று இவர்கள் ஜனாதிபதியையும் சந்தித்து உரையாடவுள்ளனர். (01)



நோர்வே தூதுக்குழுவில் வரும் எரிக் சொல்ஹெய்ம், விதார் ஹெல்கிசன், ஜோன் வெஸ்ட்பேர்க் ஆகியோர்.

### விண்ணாணம் விநாசியர்



கந்தனும், காமினியும், காசிமும் ஒண்டாக்கூடிப் பேசிறதைப் பாக்கேக்க சந்தோசமாகத்தான் கிடக்கு...

## அம்பாறை அசம்பாவிதம் ஆராய மிலிந்த குழுவினர் விஜயம்

(அம்பாறை)

அக்கரைப்பற்றுப் பகுதியில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட பதற்ற நிலை தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவொன்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியத்தையும் போராட்டத்தையும் என் மூச்சுக்காற்றாகவே நேசிக்கின்றேன்!

### மானுடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்வில் தமிழகக் கவிஞர் இன்குலாப்

(யாழ்ப்பாணம்)

இந்திய நாடு பெயரளவில்தான் ஜனநாயக நாடு. அங்கே சுதந்திரமாக எதையும் பேச முடியாது. தமிழகம்



கவிஞர் இன்குலாப்

இராணுவ முகாம்கள் எதுவுமில்லாத சுதந்திர பூமி என்று கூறப்படுவதுண்டு. ஆனால் அது சுதந்திரங்கள் பறிக்கப்பட்ட சிறைக்கூடம். யாழ்ப்பாணம் இராணுவ முகாம்கள் சூழப்பட்ட சிறைக்கூடமாக இருந்தாலும் இங்கு எதையும் பேசக்கூடிய சுதந்திரம் இருக்கிறது. இவ்வாறு நேற்றைய மானுடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்திய தமிழகக் கவிஞர் இன்குலாப் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துமபோது - தமிழ்மொழியின் வரலாறு நீண்ட பாரம்பரியம் கொண்டது. இது மதச்சார்பற்றது, பக்தி நிறைந்தது, மக்கள் உரிமைக்காக போராடக் கூடிய ஒரு நீண்ட பாரம்பரியம் தமிழர்களுக்கு உண்டு. எனினும் லெனினுடைய தேசிய இனங்களின் உரிமைப்பிரச்சினை பற்றிய புத்தகத்தைப் படித்த பிறகு தற்போது மொழியுரிமைக்காக நடத்தப்பட்டு வருகின்ற போராட்டங்கள் போதாது என்ற முடிவுக்குத்தான் என்னால் வரமுடிகிறது. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நாட்டுக்கு இருக்க வேண்டிய முதலாவது சட்ட ஏற்பாடு என்னவென்றால, எந்தவொரு தேசிய

(10ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களையே அழித்தவர்கள் கல்கூட எறியாது இருந்தனர்!

### புலிகளின் அமைதி குறித்து ஒஸ்ரின்

(மட்டக்களப்பு)

பாரிய இராணுவ முகாம்களைக் கூட துடைத்தழித்தவர்கள், ஆனால் இம்முறை படையினரை நோக்கி ஒரு கல்லைக்கூட எறியாது அமைதி காத்துள்ளனர். இவ்வாறு விடுதலைப் புலிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ.

அக்கறைப்பற்று நிலைவரம் தொடர்பாக நேற்று ஆராய வந்திருந்த அதிகாரிகளின் கூட்டத்தில் பேசியபோதே

(10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா உயர் பாதுகாப்பு வலயம் மக்கள் குடியமர அனுமதி மறுப்பு!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மீளக் குடியமர்வது தொடர்பான பணிகள் தொடர்ந்து தடைப்பட்டு வருகின்றன. படையினர் நிலைகொண்டுள்ளதற்கு அண்மித்த கிராமங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக படையினர் - அரச அதிபர் பணிமனைக்கு அனுப்பிய கடிதத்தில் பல இடங்களில் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கோதண்டர் நொச்சிக்குளம், அரசமுறிப்பு, விளாத்திக்குளம், பறநாட்டகல், புதியார் சின்னக்குளம், மாணிக்கவளவு, கள்ளிக்குளம், ஓயார் சின்னக்குளம் ஆகிய கிராமங்கள் உயர்பாதுகாப்பு பிரதேசம் என்பதால் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்க முடியாதென இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ வவுனியாவிற்கு வந்தபோது - வவுனியாவில் மீளக்குடியமர்விற்கான பணிகளை மேற்கொள்வதற்கு குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டு உயர்பாதுகாப்பு பிரதே

(10ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் விளையாட்டு அரங்கு

# மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002

## முதலாம் நாள் நிகழ்வுகள்



மானுடத்தின் தமிழ்க்கூடல் - 2002 ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று ஆரம்பமானபோது விடுதலைப் புலிகளின் பிரமுகர் பாப்பா தேசியக் கொடியேற்றுவதையும், மாவீரரின் பெற்றோர் ஒருவர் ஈகச்சுடரேற்றுவதையும், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி விழாச்சுடர் ஏற்றுவதையும் படங்களில் காணலாம்.



தேசியக்கொடியேற்றும்போது விழாமன்றத்துக்கு வெளியே கூடியிருந்த பத்திரிகையாளர்களை முதலாவது படத்திலும், விழாவுக்கு வருகைதந்திருந்த அமைச்சர் மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரை இரண்டாவது படத்திலும், பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகள், சுரேஸ் பிரேமச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் ஆகியோரை நான்காவது படத்திலும் காணலாம்.



நிகழ்வில் உரையாற்றிய இளம்பரிதி, சி.வி.கே.சிவஞானம், சு.வில்வரத்தினம், சோ.பத்மநாதன், சண்முகம் சிவலிங்கம் ஆகியோரையும்.



ரேவதி, செம்பியன் செல்வன், பேராசிரியர் சபா.ஜெயராசா, விமல் சுவாமிநாதன், தெளிவத்தை ஜோசப் ஆகியோரையும்.



பேராசிரியர் சிவலிங்கராஜா, ஓ.கே.குணநாதன், செ.யோகநாதன், தமிழினி ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - விதுர்சன்)

# சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி தீவக பாடசாலைகளில் குழு அமைப்பு

தீவகப்பாடசாலைகள் அனைத்தும், கட்டாயக் கல்விக்குழு அறிக்கையை, இம்மாத முடிவிற்குள் தீவகக் கல்விவலயத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

பதின்நான்கு வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு சமமான கல்வி வாய்ப்புகள் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் என்ற சர்வதேச பிரகடனத்திற்கு அமைவாக இந்தக்குழு அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று கல்வித் திணைக்களச் சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளது.

இதற்கேற்ப பாடசாலைகள் இந்தக் குழுக்களை அமைத்து, பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களை பாடசாலையில் சேர்த்து, கல்வி போதிக்க நடவடிக்கை எடுப்பதுடன்; பாடசாலைக்கு வரவு குறைந்த மாணவர்களின் வரவை மேம்படுத்த வேண்டும்.

எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன் இந்தக் குழுக் கூட்டத்தைக் கூடி அது சம்பந்தமான அறிக்கையை தரவுகளுடன் சமர்ப்பிக்குமாறு தீவகக் கல்வி வலயம் - பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளது.

தரவுகள், விபரங்கள் சேகரிக்கவும் மாணவர் வரவை உறுதிப்படுத்தவும், கிராம அலுவலர் மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்களின் சேவையைப் பயன்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'தேரார் வீதியில்' நாடக அரங்கேற்றம்

நாடக அரங்கக் கல்லூரி நாடக தயாரிப்பிற்கான சான்றிதழ் கற்கை நெறி பரீட்சை தயாரிப்பான 'தேரார் வீதி' நாடகம் நாளை திங்கள் மாலை 2.30 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அரங்கேறவுள்ளது. க.சிறிகந்தவேள் நெறியாள்கையில் அமைந்த இந்நாடக அரங்கேற்றத்திற்கு பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி வருகைதரவுள்ளார்.

## ஆசிரியர் சேவை தரமுயர்வு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(மானிப்பாய்)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2ஆம் வகுப்புக்கு நியமித்தல் விண்ணப்பமும், இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2ஆம் வகுப்பின் IIஆம் தரத்திற்கு நியமித்தல் அல்லது உயர்த்துதல் பதவிக்கான விண்ணப்பம் அரசாங்க சேவை ஆணைக்குழு கல்விச் சேவைக் குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது.

அரசாங்க வர்த்தமானியில் கேட்கப்பட்டதற்கிணங்க தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக்குழு, இசுறுபாய, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தினை திணைக்களத் தலைவரூடாக சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (100)

## பஸ்சில் பெண்களுடன் சேஷ்டை; நையப்புடைக்கப்பட்டனர் இருவர்!

(இயற்றாலை)

பஸ்ஸில் பயணித்த இரு இளம் பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்ற இரு இளைஞர்கள் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட சம்பவம் ஒன்று கொடிகாமத்தில் நடந்துள்ளது.

கடந்த வியாழன் மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் சென்ற தனியார் பஸ்ஸில் பயணம் செய்த இரு பெண்கள் மீது இளைஞர் இருவர் சேஷ்டை புரிந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட இப்பெண்கள் கொடிகாமத்தில் பொதுமக்களிடம் இது பற்றி முறையிடவே அங்கு நின்றவர்கள் இரு இளைஞர்களையும் நையப்புடைத்து எச்சரித்து அனுப்பினர்.(35)

## அடுத்த ஆண்டுக்கான பாடசாலைத் தவணை அறிவிப்பு

(மானிப்பாய்)

2003ஆம் ஆண்டுக்கான பாடசாலைத் தவணைகள் பற்றி கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி,

முதலாம் தவணைக்கான விடுமுறை ஜனவரி மாதம் - 1ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வரையும், இரண்டாம் தவணைக்கான விடுமுறை மே மாதம் 19ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 8ஆம் திகதி வரையும், மூன்றாம் தவணைக்கான விடுமுறை ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 28ஆம் திகதி வரையும் நடைபெறும்.

வருடத்தில் ஆகக்குறைந்த 193 நாட்கள் பாடசாலை நடத்தப்படல் வேண்டும். ஏதாவது காரணங்களுக்காக பாடசாலை மூடப்பட வேண்டிய தேவை ஏற்படின் மாகாணப் பாடசாலையாயின் மாகாண கல்வி அமைச்சின் அனுமதியுடனும், தேசிய பாடசாலையாயின் மாகாண கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடனும் அதற்கான பதில் பாடசாலை நடத்தப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## சேதமடைந்த மருதங்கேணி பாலம் திருத்த வேலைகள் ஆரம்பம்

### பொதுமக்கள் சிரமம் பெரிதும் குறையும்

(மீசாலை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பாலத்தினைத் திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

15 வருடங்களாகக் கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்ட இப்பாலத்திற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும், மாரி காலம் தொடங்கி போக்குவரத்துக்கள் தடைப்படுகின்ற நிலையில் தான் வீதி அபிவிருத்தி அதிகார சபை இப்பாலத்தினை திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மாரி காலம் தொடங்கிய இவ்வேளையில் இப்பாலத்தினூடு பயணஞ்செய்ய முடியாமல் வடபிராந்தியப் போக்குவரத்து பஸ்கள் இப்பாலத்துடன் தமது சேவையை சில நாட்களாக நிறுத்தியுள்ளன. இதனால் பயணிகள் இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டியுள்ளது. இவ்வாறு பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கும் இவ்வேளையில் பாலம் திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பாலத்தைத் திருத்த நிதி ஒதுக்கீடு செய்தும் பணிகள் ஆரம்பிக்கப்படாமை குறிதது அண்மையில் நமது ஈழநாடு செய்தி வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (25)

## நெடுந்தீவு தபாலகத்திற்கு தொலைத்தொடர்பு வசதி இல்லை

(புங்குடுதீவு)

நெடுந்தீவு பிரதேச பிரதம தபாலகத்திற்கு உடன் தொலைத தொடர்பு வசதியினை வழங்குமாறு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன உத்தரவு விடுத்தபோதும் இதுவரை அதற்கான எந்த நடவடிக்கையும் மேறகொள்ளப்படாமல் இருப்பதாக தபாலக வட்டாரத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நெடுந்தீவுக்கு வருகை தந்த அமைச்சருக்கு நெடுந்தீவு தபாலகத்தினரால் மகஜர் என்று கையளிக்கப்பட்டதை அடுத்து போக்குவரத்து மற்றும் வசதிகள் குறைவான இப்பிரதேசத்திற்கு தொலைபேசி அவசியம் என்பதனால் இணைப்பு ஒன்றை வழங்குமாறு சிபார்சு செய்திருந்தார். இது தொடர்பாக தகவல் தொழில்நுட்ப அமைசசர், தபால் மா அதிபர், சிறிலங்கா ரெலிகொம் தலைவர் ஆகியோருக்கு அறிவித்தல் வழங்கபபட்டிருந்தபோதும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### வெள்ள வாய்க்கால் திருத்தம்

தெல்லிப்பளையில் உள்ள நாதோலை - வெள்ள வாய்க்கால் ஒழுங்கை அப்பகுதி மக்களின் ஒத்துழைப்புடன் வலி.வடக்கு பிரதேச சபை ஊழியர்களினால் விசாலமாக்கப்படுகிறது.

எனினும் இவ்வீதி 2003ஆம் ஆண்டிற்கான - நிதி ஒதுக்கீட்டிலேயே திருத்தப்படவுள்ளதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (68)

### மனைப்பொருளியல் பயிற்சி வகுப்பு

வடக்குக் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நல்லூர் பிரதேச செயலகத்தினூடாக நடத்திவரும் மனைப்பொருளியல் பயிற்சி வகுப்பு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெற்று வருகின்றது. 28 மாணவிகள் பயிலும் இம்மனைப் பொருளியல் பயிற்சி வகுப்பின் முடிவில் தகுதி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.(55)

### சண்டிலிப்பாய் இந்துவுக்கு நிதியுதவி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களின் வசதி கருதி புதிய வகுப்பறை கட்டடமொன்றினை நிறுவுவதற்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் 23 லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதாக கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை இக்கல்லூரிக்கு 3 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களைக் கொள்வனவு செய்து வழங்குவதற்கும் இந்நிறுவனம் முன் வந்துள்ளது.

இக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்கமும், நலன்விரும்பிகளும் விடுத்த வேண்டுகோளை ஏற்று இந்த நிறுவனம் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், வகுப்பறைக் கட்டடம் அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் விரைவில் ஆரம்பிக்கபடவுள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார். (100)

## சுயதொழில் முயற்சிகளுக்கு பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு

(புலோலி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறும் சுயதொழில் மேற்கொள்ளுபவர்களுக்கு பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறும் 10 யுவதிகளை தெரிவு செய்து அவர்கள் சுயதொழில் மேற்கொள்ளும் முகமாக தலா பத்தாயிரம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் முதல் கட்டமாக 5000 ரூபா வழங் கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் இரண்டாவது கொடுப்பனவு 5000 ரூபா இன்னும் ஒரு வாரத்தில் உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகஸ்தர் என்.இராசலிங்கம் தெரிவித்தார். (15)

## சட்டவிரோதமாக சவுக்கு தறித்தோர் மடக்கப்பட்டபோது தப்பியோடினர்!

### பாதுகாப்புக் குழுவினரின் நடவடிக்கையால் பலன்

(வடமராட்சி)

சட்டவிரோதமான முறையில் மணல்காட்டுப் பகுதியில் சவுக்கு மரங்கள் வெட்டியவர்களை மக்கள் மடக்கிப் பிடிக்க முற்பட்டவேளை அவர்கள் தப்பியோடிவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமான முறையில் பச்சை மரங்கள் தறிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றவேளையில் - அதனை கட்டுப்படுத்த அப்பகுதியில் இயங்கும் சூழல் பாதுகாப்புக் குழுக்கள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் பெருமளவிலான விறகு வியாபாரிகள் கூட்டமாக சவுக்கு மரங்கள் தறித்துக் கொண்டிருந்த நேரம் அவர்களை பிடிக்க முற்பட்டவேளை அவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இருபதுக்கு மேற்பட்ட சைக்கிள்களில் வந்த இக்குழுவினர் வெட்டிய விறகுகளையும் கோடரி, கத்திகளையும் விட்டுத் தப்பியோடினர். கைவிடடுச் சென்ற விறகுகளை சூழல் பாதுகாப்பு குழுவினர் இரு உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

அதேவேளை குடத்தனை, அம்பன், மணல்காடு, பொற்பதி, வல்லிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள சவுக்கு, சஞ்சீவி, பொற்பத்தை, கண்டல் மரங்களை வெட்டுவதற்கு அரசியல் துறையினர் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்ககது. (23)




காலமும் கோலமும்

### வெடிபொருட்கள் படையினரால் செயலிழப்பு

காரைநகர் ஊரிப்பகுதியில் அண்மையில் கடற்படையினர் கைவிட்டுச் சென்ற பகுதியில் ஏராளமான வெடிபொருட்கள் காணப்பட்டன. பொதுமக்கள் இது குறித்து அறிவித்ததை தொடர்ந்து படையினரால் இவ்வெடி பொருட்கள் செயலிழக்க வைக்கப் பட்டன. (52)

### காவல் நிலைகள் அகற்றப்பட்டன

ஊர்காவற்றுறை நகரப் பகுதியிலிருந்து ஈ.பி.டி.பியினரின் காவலரண் அகற்றப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை நகரப்பகுதியிலிருந்து துறைமுகத்திற்குச் செல்லும் வீதியில் அமைநதிருந்த ஈ.பி.டி.பியின் காவலரணே கடந்த புதன்கிழமை முதல் அகற்றபபட்டுள்ளது. (97)



மானுடத்தின் தமிழ்க்கூடல் - 2002 நிகழ்வில் புதுவை அன்பனின் 'கரைதேடும் ஓடங்கள்' நாடகத்தின் காட்சிகளில் சில...

படம்:- விதுர்சன்

# புகைப்பட மெய்யுருக்கள் - உள்ளும் புறமும்

**யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் கலை வட்டத்தினர், முதுசம் தொடர் நிகழ்வின் எட்டாவது நிகழ்வாக நூலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழன் முதல் இன்று வரை 'யாழ்ப்பாணத்து ஆரம்பகாலப் புகைப்படங்களின் காட்சி' என்னும் கருப்பொருளில் புகைப்படக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளனர். இதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

யாழ்ப்பாணத்தில் புகைப்படம் ஓர் கலை வடிவமாக அல்லது தொழில் துறையாக கண்ட போக்கு மாற்றங்களைப் பற்றிப் பேசு



தல் என்பது ஒரு வகையில் யாழ்ப்பாணத்தில் காலனியப் பண்பாட்டுப் பரவுகை பற்றியும், சமூக மாற்றம் பற்றிப் பேசுதலாக அமையும். எனினும் பாரிய அழிவுகளுக்கும், புலப்பெயர்வுகளுக்கும் முகங்கொடுத்து வரும இப்பிரதேசத்தில் புகைப்படம் போன்றதொரு சாதனத்தின் இருப்பு என்பதும், பாதுகாப்பு என்பதும் மிகவும் கேள்விக்குரியது. ஏனெனில் புலப்பெயர்வுகளில் தொடர்ந்து இந்த மண்ணைவிட்டு (இந்த மண்ணின் நினைவாக) எடுத்துச் செல்லப்படுவனவாயும், அழிவுகளில் மிகச்சுலபமாகப் பழுதடைவனவாயும் இவை காணப்படுகின்றன. இந்தப் பின்னணியில் இவற்றின் காலரீதியிலான நிரைப்படுத்துகையினுடாக பெறப்படுகின்ற முடிவு என்பது இன்னும் பல முழுமையடையாத பக்கங்களைக் கொண்டுள்ளது எனலாம்.

இன்னும் எஞ்சியுள்ள புகைப்படங்களில் சேகரிக்க முடிந்தவற்றைக் கொண்ட இக் காட்சியானது யாழ்ப்பாணத்து சமகால காண்பியக் கலை வரலாற்றில் அதிகம் பேசப்படாத பக்கங்கள் பற்றிய திறப்பாக அமைவதுடன், யாழ்ப்பாணத்தில் புகைப் படத்தின் வரலாறு, அதன் வெளிப்பாட்டுத் தன்மை, காட்சிப்புலம், காண்பிய அர்த்தம், தொழில்முறை வளர்ச்சி என்பன பற்றிய கருத்தாடலை தொடக்க முயல்கின்றது.

1822 ஆம் ஆண்டில் முதலாவது நிலையான புகைப்பட உருவை உருவாக்குகின்ற முயற்சியில் பிரான்சு வெற்றி கண்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமூக, அரசியல் தொழில்நுட்பப் போக்கு மாற்றத்தில் புகைப்படத்தின் வருகை மிகுந்த முக்கியத்



துவம் வாய்ந்ததாக அமைந்தது. இது பாரம்பரிய கலையில் அதிகம் வலியுறுத்தப்பட்ட அபூர்வத் தன்மை (aura), தற்புதுமை (originaliry) போன்ற இயல்புகளைக் கேள்விக்குள்ளாக்கியது. மறுபுறத்தில் புகைப் படம் ஓர் கலைவடிவமா என்ற வினாவும் எழுப்பப்பட்டது. இதற்கான பதில்கள் கலை பற்றி மாறும் வியாக்கினங்களுடன் மாறுபடுகின்றன எனினும், எண்ணெய் வர்ணம், நீர் வர்ணம் போல இதுவும் வெளிப்பாட்டுக்கான ஓர் சாதனம் என்பதும், புகைப்படம் ஏன் கையாளப்பட்டது என்ற கேள்வியே, இது கலையா இல்லையா என்ற முடிவுக்கு இட்டுச்செல்லும் என்பதும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வாதமுமாகும்.

புகைப்படங்கள் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் மெய்யுருக்களைப் பதிவுசெய்யும் ஊடகமாகவே அதிகம் பிரசித்தம் பெற்றிருந்தன. 1850 இல் தமது மெய்யுருக்களை வரைவிப்பதில் ஆர்வமாக இருந்த மேற்கத்தைய மத்தியதர வர்க்கத்திற்கு இது ஓர் வரப்பிரசாதமாக அமைந்தது. இதனால் சாதாரண மனிதன் கூட ஞாபகத்திற்குரியவன் ஆக்கப்பட்டான். அந்த வகையில் அமெரிக்க மற்றும் பிரான்சுப் புரட்சிகளின் பிரதான முன்வைப்பான ஜனநாயகப் பண்புகளின் முகிழ்வாக இந்த மெய்யுருப் புகைப்படங்கள் அமைந்தன.

ஆரம்பகாலப் புகைப்படங்கள் காட்சி முறைமையில் (mannerism) பெரிதும் அக்காலத்து எண்ணெய் வர்ண ஓவியங்கள் (Oil paintings) ஒத்திருந்தன. 15 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட எண்ணெய் வர்ண ஓவியமானது அது சித்திரித்த பொருளின் புறத்தன்மையின், தொட்டுணர்வின், இழைமத்தின், திரளுருவின் பிரதிநிதித்துவமாக அமைந்தது. அந்த வகையில் பொருண்மைவாத வெளிப்பாடாக அமைந்த இவ்வோவியங்களினூடு அனைத்துப் பண்டங்களாயும், பண்டமாற்றுக்குரியனவாயும் மாற்றம் கண்டன. இந்த ஓவியப் பண்புகளின்



தொழில்நுட்ப மாற்றமாக அமைந்தது. அக்காலப் புகைப்படங்கள் எண்ணெய் வர்ண ஓவியம் கொணர்ந்த பார்வை முறையை (way of seeing) தொடர்ந்து தக்க வைத்துக கொண்டன. இதனால் உருக்கள் ஓவியச் சட்டகத்துள் தோன்றியது போலவே புகைபடச் சட்டகத்தினுள்ளும் தோன்றின.

ஐரோப்பாவில் புகைப்படம் புழக்கத்திற்கு வந்த மிகக்கிட்டிய காலத்திலேயே யாழ்ப்பாணத்திற்கும் (1853) அமெரிக்க மிஷனரிகளால் அது அறிமுகம் செய்யப்பட்டது. காலனித்துவவாதிகளுக்கு தமது ஆட்சிக்குட்பட்ட புதிய நிலத்தின் இயற்கை வனப்பு, மக்களின் நடை, உடை, பாவனை, நபர்கள் பற்றித் தமது தாய்நாட்டில் உள்ளவர்களுக்குக் காட்ட வேண்டிய தேவையும், அவை பற்றிய தகவல்களைப் பதிவுசெய்யும் தேவையும் இருந்தது. இதற்காக ஆரம்பத்தில் கோட்டுப் படங்களும், ஓவியங்களும், அச்சுப் படங்களும் (Prints) பயன்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாகவே புகைப்படத்தின் வரவும் நிகழ்ந்தது. எனவே புகைப் படம் யாழ்ப்பாணத்திற்கு கலை வெளிப்பாட்டு சாதனம் என்பதிலும் பதிவுசெய்தலுக்கான சாதனமாகவே அறிமுகப்படுத்தப்பட்டது எனலாம்.

புகைப்படங்களினூடு மேற்கத்தைய கலாசாரத்தையும், காட்சி முறைமையையும் பழகிய உள்ளூர்க்காரர்கள், இங்கு காலனித்துவவாதிகளுக்காகப் பிடிக்கப்பட்ட படங்களில் காலனித்துவவாதிகளின் கண்களினூடு தங்களைக் கண்டார்கள். இந்த வகையில் காலனித்துவவாதிகளைக் கவர்ந்த உள்ளூர் இனத்துவ அடையாளங்கள் மேற்கு நிலைப்பட்ட காட்சித் தளத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இந்த இருவேறு காட்சிப் பண்புகளும், பதிவு செய்யும் ஊடகமாக காலனித்துவ பயன்பாடுமே அன்றைய யாழ்ப்பாணத்தில் புகைப்படம் பற்றிய வெகுஜனக் கருத்து நிலையைத் தீர்மானித்துள்ளது எனலாம்.

காலனித்துவ 'முற்போக்கு' அடையாளத் தினதும், அதிகாரத்தினதும், அந்தஸ்தினதும் புதிய குறிப்பான்களாகக் காணப்பட்ட இந்த புகைப்படங்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் காலனிய பெறுமானங்களையும், சடங்காசாரத்தையும் உள்வாங்கி மேற்கிளம்பும் மேட்டுக்குடிகளிடம் (Elites) உடனடி வரவேற்பை பெற்றது இயல்பானதே. இந்த மேட்டுக்குடிகளின் அடையாளப் இருமைப்பாட்டின் தெரிவாகவும், வெளிப்பாடாகவும் இவை அமைந்தது கவனிப்பிற்குரியது.

புகைப்படங்களில் இந்த மேட்டுக்குடிகள் என்றும், அணியாத ஆடை ஆபரணங்கள் உடன் தமது புதிய அந்தஸ்தின் குறிப்பான்களான பொருள் பண்டங்களுடன் காணப்படுகின்றார்கள். இதில் அவர்களின் மேலைத்தேய மோகத்தினையும், கீழைத்தேய பண்பாடு பற்றிய கழிவிரக்கத்தையும் குறிக்கும் பொருட்கள் காணப்படுகின்றன. ஆண்கள் பெரும்பாலும் வைபவ ரீதியான மேலைத்தேய ஆடைகளுடனும், பெண்கள் மேற்கத்தைய ஆடையின் தோற்றப்பாட்டினை ஒத்த சேலைமுனைதலுடனும் காணப்படுகின்றனர். இவர்களின் நிற்கின்ற, இருக்கின்ற முறைகளும், பிற அங்கநிலைகளும் மேற்கத்தைய எண்ணெய் ஓவியங்களை ஞாபகப்படுத்துகின்றன. இத்துடன் இக்காலத்தில் புழக்கத்திலிருந்த தளபாடங்கள், திரைச்சேலைகள், தளவிரிப்புக்கள், காலனிகள், ஆபரணங்கள், துணிவகைகள், கிராமபோன்கள் என்பனவும் பதியப்பட்டுள்ளன. இவற்றை அவற்றின் இளமைத் தன்மை வேறுபாட்டுடனும், நுண்ணிய இருள் ஒளித் தன்மை வேறுபாட்டுடனும் சிறைப்பிடித்துள்ளமை என்பது அக்கால புகைப்படக்காரரின் வினைத்திறனை எடுத்துக்காட்டுகிறது. அந்த வகையில் பொருட்களையும் நபர்களையும் காட்சிக்குரிய பண்டங்களாக மாற்றுவதில் இவர்கள் வெற்றிகண்டுள்ளார்கள்.

**தா.சனாதனன்**

இந்த புகைப்படங்களிலுள்ள இன்னொரு சுவாரஸ்சியமான அவதானம் இவற்றில் ஆண்களும் பெண்களும் காட்சிப்படுத்தப்பட்ட முறையாகும். ஆண்கள் அதிகாரத்தினதும், வல்லமையினதும் வடிவங்களாக புகைப் படத்திலிருந்து பார்வையாளரை நோக்குகின்றார்கள். பெண்களோ தாம் பார்வையாளரால் பார்க்கப்படுகின்றோம் என்ற சுய பிரக்ஞையுடன் காணப்படுகிறார்கள். இதுவும் எண்ணெய வர்ண ஓவியங்களிலுள்ள ஓர் பண்பாகும். இந்த மெய்யுருக்கள் குழு நிலையாக (group) அமையும்போது அது அதிகார முக்கியத்துவ அடுக்கமைவின் வெளிப்பாடாய் அமைந்துள்ளது. அந்த வகையில் முக்கியத்



துவம் குறைந்தவர் எப்போதும் 'விளிம்பில்' காணப்படுகிறார். இந்த அவதானங்கள் புகைப் படம் வெளிப்பாட்டுச் சாத்தியப்பாடு என்பதிலும் ஓர் பார்வை முறையாக அல்லது காட்சி முறையாகவே உள்வாங்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றன.

சாதி நிலைப்பட்ட அதிகார அடுக்கமைவுள்ள யாழ்ப்பாணச் சமூகத்தில் பாரம்பரியமாக கலைப் பயில்வும், அதன் நுகர்வும் சாதிய அடிப்படைக்குட்பட்டது. ஆனால் பாரம்பரிய வெளிப்பாட்டுச் சூழலுக்குள் புதிதாகப் புகைப்படம் அறிமுகமானபோது, அது இந்த வரம்புகளிற்கு வெளியே இயங்க வாய்ப்பாகின்றது. எனினும் கிடைக்கப்பட்ட பெரும்பாலான ஆரம்பகாலப் புகைப்படங்கள் மேட்டுக் குடிகளுக்குரியன என்பது கவனத்திற்குரியது. இங்கு தான் புகைப்படம் எடுப்பவருக்கும் எடுக்கப்படுபவருக்குமான சாதி நிலைப்பட்ட உறவு முதலிடம் பெறுவதைக் காணமுடிகிறது. இதனால் மேல்நிலை வகுப்பினரே அதிகம் புகைப்பட நுகர்வோராக இருந்துள்



ளார்கள். ஆனால் தொடர்ந்த காலப்பகுதியில் இன்னிலையில் மாற்றம் ஏற்படுகிறது. தேசிய அடையாள அட்டைக்கு படம்பிடித்தல் கட்டாயமாவது, பிற சமூக பொருளாதார மாற்றங்கள், புகைப்பட நிலையங்களின் பரவுகை என்பன இதைச் சாத்தியமாக்குகின்



றன எனலாம். எனினும் இந்த ஜனநாயக வாக்கம் என்பது அதன் காட்சிப் பண்பிலும், கருப்பொருளிலும் பெரிய மாற்றங்களைக் கொண்டுவரவில்லை. ஏனெனில் புகைப்படம் தொடர்ந்தும் பலருக்கு கனவிற்கும் யதார்த்தத்திற்குமான சமரசமாகவும், எல்லோரும் இருக்க ஆசைப்படுகிற தன் வடிவங்களாகவும் அமைந்தன. அந்த வகையில் இந்த அபிலாசைகளின் நிரப்ப முடியாத இடை வெளியைத் தொடர்ந்தும் இந்த மெய்யுருக்கள் நிரப்ப முயன்றன.

பலத்த கேள்வி இருந்த பல்வேறு சந்தர்ப்பங்களில் பிடிக்கப்பட்ட மெய்யுருக்களைத் தவிர, இயற்கைக் காட்சிகளோ, பொதுக் கட்டங்களோ, விழாக்களோ புகைப்படங்களில் பதிவு செய்யப்பட்டது மிகக்குறைவு என்பது இந்த சேகரிப்பில் இருந்து கிட்டுகின்ற இன்னொரு செய்தியாகும். இது மறுதலையாகப் புகைப்படம் கலை வெளிப்பாடகவோ அன்றி பொழுது போக்காகவோ அல்லாமல் தொழிலாகவோ ஆரம்பத்தில் பயிலப்பட்டதற்கான சுட்டி ஆகின்றது. எனினும் இந்தத் தொழில் வாய்ப்பினுள் புகைப்படம் என்கின்ற சாதனத்தின் வெளிப்பாட்டு எல்லைகளை விரித்த படைப்புக்களையும் படைப்பாளிகளையும் இனம் காணமுடிகிறது.

இந்த வகையில் காலனிய, சுதேசிய முரண்பாடுகளினதும், தொழில்நுட்பச் சாத்தியப்பாடுகளினதும், தொழில் ரீதியான ஊடாட்டத்தின் அடையாளங்களாக இந்த மெய்யுருக்கள் அமைகின்றன. இவை பற்றிய தொடர்ந்த விவாதமானது யாழ்ப்பாணச் சமூகத்தில் கலைபற்றிய கருத்து நிலை, மற்றும் சனரஞ்சக ரசனை (Popular taste) என்பன பற்றிய புரிதல்களுக்கும் இட்டுச்செல்லும்.

# இரு பெரும் வேகப் புயல்கள்



Iam the Greatest

எதிர்பார்த்தபடி 100 மீற்றர் ஆசிய குறுந்தூர ஓட்டத்தில் சுசந்திகா தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். காலையில் தெரிவுப் போட்டியில் 11.16 செக்கனில் ஓடி முதலிடம் பெற்றவர், அதே நாளில் 11.15 செக்கன்களில் ஓடி ஆசிய விளையாட்டுப் போட்டியின் **Record Time** ஆகவும் அதை மாற்றிவிட்டார். மிகவும் மனத்தைரியத்துடன் சுசந்திகா எதிர்காலத்தில் 200 மீற்றர் போட்டியில் கூடுதல் கவனம் செலுத்தப்போவதாகக் கூறுகின்றார். மேலும் - தன் இலக்கு 2004 ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்வதுதான் என்கிறார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சாதனை வீராங்கனை மரியன் ஜோன்ஸுடன் 200 மீற்றர் போட்டியில் தன்னால் சவால் விட முடியும் என்கிறார். கடந்த மாதம்தான் ஆசிய தடகளச் சம்பியன் போட்டிகளில் இரட்டைத் தங்கம் வென்றவர் சுசந்திகா. அடுத்த நகர்வாக பயிற்சிக்காக அமெரிக்கா செல்லவிருக்கும் சுசந்திகா, மரியன் ஜோன்ஸின் தாய் நாட்டிலேயே தொடர்ந்தும் பயிற்சிபெறப் போவதாக கூறுகின்றார். என்னால் 22 செக்கனுக்குள் 200 மீற்றர் தூரத்தை ஓடி முடிக்க முடியும் என்கிறார். இதேவேளை, 1988 இல் புளோரன்ஸ் கிரிபித் ஜொய்னர் 200 மீற்றர் தூரத்தை ஓடிமுடிக்க எடுத்த 21.34 செக்கன்களே இன்னும் உலக சாதனையாக இருக்கின்றது.

எது எவ்வாறாயினும் காலில் ஏற்பட்ட ஒரு உபாதையால் 200 மீற்றர் ஓட்டத்தில் சுசந்திகா கலந்துகொள்ளவில்லை என்பது மிகவும் ஏமாற்றமான செய்தி. இதேவேளை, 200 மீற்றர் ஓட்டத்தில் தர்ஷா பங்கு கொண்டிருந்தால் தங்கம் நிச்சயம். ஆனால் 400 மீற்றர் ஓட்டத்தில் அவர் பங்கு பற்றியதால் 200 மீற்றர் ஓட்டத்தில் பங்குகொள்ள இயலவில்லை. சுசந்திகா கருத்துக் கூறும்போது இருவரில் ஒருவராவது பங்குகொள்ளமுடியாமற் போயிற்றே என்று அங்கலாய்த்தார்.

இது இவ்வாறிருக்க் - இனிவரும் பெரும் விளையாட்டு ஏதென்ஸ் ஒலிம்பிகதான். சுசந்திகாவின் அடுத்த இலக்கும் அதுதான். என்ற வகையில் அங்கு இவர் எதிர்கொள்ளப்போவது அமெரிக்காவின் மரியன்ஸ் ஜோன்சைத்தான். மரியன் கடந்த ஐந்து வருடங்களாக குறுந்தூர ஓட்டத்தில் தன்னிகரில்லாத் தலைவி. தற்போது ஸ்பானியாவின் மட்ரிட் நகரில் நடைபெற்று முடிந்த தடகளப் போட்டிகளில் சாதகமற்ற காலநிலையிலும் மரியன் ஜோன்ஸ் முதலிடம் பெற்றார் (10.90 செக்.). இதே போட்டியில் சுசந்திகா பெற்ற இடம் மூன்றாவது (11.20செக்). அப்படியாயின் மரியன் ஜோன்ஸிடம் இருந்து சுசந்திகா ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் செல்வதாயின் மிகுந்த சிரமங்கள் எடுக்க வேண்டும். அதனையே அவர் செய்யத் தொடங்குவார். சுசந்திகா சாதிக்க முடியாதவரும் அல்லர். மரியன் ஜோன்ஸ் இலகுவில் விட்டுக்கொடுக்கக் கூடியவரும் அல்லர். பொறுத்திருந்து பார்ப்போம்.

– நிர்மலன் –




Iam Undefeated

# ஆசியப் போட்டி



– தெய்வா –

☆ இலங்கையின் சிறியானி குலவன்ச தன்னை 4x100 அஞ்சலோட்ட நிகழ்ச்சிக்குச் சேர்த்துக் கொள்ளாததையடுத்து பெரும் மனக்கிலேசத்துக்கு உள்ளாகியுள்ளார். இதன் காரணமாகத் தனது தனித்த நிகழ்விலும் சரியாகப் பங்குகொள்ளும் மன நிலை பாதிக்கப்பட்டிருந்தது என்கிறார். இலங்கை விளையாட்டுச் சம்மேளனத் தலைவர் தனக்கு வாக்களித்தபடி தெரிவுப் போட்டியொன்றை நடந்தவில்லை என்று குறைகூறுகின்றார். இது தொடர்பாக இலங்கை அணித்தலைவி சுசந்திகா கருத்துக் கூறுகையில் - முன்னமேயே அணி தீர்மானிக்கப்பட்ட நிலையில் மீண்டும் ஒரு தெரிவுப்போட்டி நடாத்த இயலாதென்கிறார். மேலும் தடத்தின் வளைவுப் பகுதிகளில் சிறியானியின் வேகம் மந்தகதி அடைவதா கவும் இது போட்டியின் முடிவைப் பாதித்துவிடும் என்றும் கருத்துக் கூறப்படுகிறது. அப்படியாயின் இவருக்கு நேர்த்தடம் கொடுக்கலாமே என்றும் வாதிடப்படுகிறது. சிறியானி தனக்கெதிராகச் சதி நடைபெறுகிறது என்கிறார். தற்போது தீர்மானிக்கப்பட்டிருக்கும் அணியில் அனோமா சூரியாராச்சி, தமயந்தி தர்ஷா, ஜானி சத்துராங்கனி, சுசந்திகா ஜயசிங்க என்ற ஒழுங்கிலேயே வீரான்கனைகள் பங்குகொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

4x100 போட்டியில் தங்கப்பதக்கத்தை தட்டிச்செல்லும் என்று முழுதாக எதிர்பார்க்கப்பட்ட இலங்கை அணி, இந்நிகழ்வில் கலந்துகொள்ளவேயில்லை. சீனா இந்நிகழ்ச்சியல்

# செய்திகள்

தங்கம் வெல்ல எடுத்துக் கொண்ட 43.84 செக்கன்கள் இலங்கைக்குக் கடினமானதாக இருந்திராது என்று நம்பப்படுகிறது ஆரம்பத்திலேயே சிறியாணி குலவன்ஸ இந்நிகழ்வில் ஓரங்கட்டபட்டதன் பின் அவர் நாடு திரும்பத் தயாரானதும், சுசந்திகா தசைப்பிடிப்பால் நிகழ்வில் கலந்துகொள்ள முடியாமற் போனதும், இன்னொரு வீராங்கனை இத்தாலி சென்றதும் என்றவாறு அணியில் முதல்நிலை வீராங்கனைகளை கொண்டதான அணி கனவாகப் போயிற்று. உடல் துன்பங்கள் மட்டுந்தான் காரணமா? சிலரது மனத் துன்பங்களும் இந்த நிலைக்குக் காரணமா? சம்பந்தப்பட்ட தரப்பாரிடையே ஏற்பட்ட மனக்கசப்புகள் ஒரு தங்கத்தை இழக்கச் செய்ததா என்று கவலைப்படும் வேளையில், இன்னொரு அதிர்ச்சி ஆண்கள் 4x400 அஞ்சலோட்ட நிகழ்ச்சியில். இந்நிகழ்ச்சியல் இரண்டாவது மூன்றாவது வீரர்களுக் கிடையிலான கோல் பரிமாற்றத்தில் ஏற்பட்ட தாமதம் இன்னொரு தங்கம் கிடைக்கும் என்ற நம்பிக்கையைச் சிதறடித்துவிட்டது. இத்தோடு முன்னணி வீரர் சுகத் உடல்நலக் குறைவோடேயே ஓடியுள்ளார். இந்நிலையில் கூட 4x100 m ஆண்கள் அஞ்சலோட்டத்தில் வெண்கலப்பதக்கத்தை இலங்கை வென்றிருந்தது. துரதிஷ்டத் தடைகள் ஏற்படாதிருப்பின் இங்கும் ஒரு தங்கப்பதக்கம் உறுதிசெய்யப்பட்டிருக்கும்.




☆ இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த மூன்று விளையாட்டு வீரர்கள் தென்கொரிய இலங்கை முகாமிலிருந்து தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஜிம்னாஸ்டிக் வீரர் ஒருவர் தலைமறைவாகி 24 மணி நேரங்களுக்குள் இரண்டு கபடி வீரர்கள் காணமற் போய்விட்டார்கள். அதிகாரிகள் கருத்துக் கூறும்போது, சகல விளையாட்டு வீரர்களின் கடவுச் சீட்டுக்களையும் இத்தகு காரணங்களால் தாங்களே பொறுப்பேற்பது வழக்கம் என்று கூறுகின்றார். தலைமறைவாகியவர்கள் தங்கள் உடமைகள் எதையும் எடுத்துச்செல்லவில்லையென்றும் கூறுகிறார்.

இதேவேளை, மொங்கோலிய வீராங்கனை ஒருவரும் கணமற்போயுள்ளார். நேபாளத்தைச் சேர்ந்த எட்டு வீரர்கள் காணமற்போய் இடம்மாறிப் போய்விட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள். இலங்கை வீரர்கள் தவறுதலாகக் காணமற்போனார்களா அல்லது தென் கொரியாவின் செல்வச் செழிப்பில் தம் வாழ்வைப் பசுமையாக்கத் திட்டமிட்டு தலைமறைவானார்களா என்பது தெரியவில்லை.




# பத்தாவது



ஜே.நிரஞ்சன்

பாடசாலைகளுக்கிடையிலான பத்தாவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளன. இந்தத் தடகளப் போட்டிகளில் புதிய சாதனைகள் இருபத்தேழு நிலைநாட்டப்பட்டுள்ளன. மேலும் பத்தாவது பாடசாலைத் தேசிய விளையாட்டுகளின் சிறந்த வீரனாக, மெனிக்கின்னவில் அமைந்திருக்கும் ஏ.றத்நாயக்க ம.ம.வி. மாணவன் பி.டபிள்யூ பி.எச்.புஷ்பகுமார தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இம்மாணவன் 400 மீற்றர் ஓட்டத்தை, 47.8 செக்கனில் ஓடி முடித்துள்ளார். இதேவேளை, சிறந்த வீராங்கனையாக மாதம்பை சேனாநாயக்க ம.ம.வி. மாணவி ஏ.எம்.சி. சுபாஷினி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் 400 மீற்றர் தூரத்தை 57.6 செக்கனில் ஓடிமுடித்துள்ளார்.

# பாடசாலை மாணவர்

மேலும் பொதுவாகத் தடகளப் போட்டிகளில் அதிவேக ஆண், பெண் யார் என்பது ஆவலாக எதிர்பார்க்கப்படுவதொன்றாகும். அந்தவகையில் பாடசாலை தேசியப் போட்டிகளில் 15, 17, 19, 21 வயதுப்பிரிவுகளில் 100 m ஆண், பெண் குறுந்தூர ஓட்டங்கள் நடை பெறுகின்றன. இப்பிரிவுகளில் 21 வயதுக்குட்பட்டோர் பிரிவில் முதலிடம் பெற்ற ஆண், பெண் வீரர்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுதல் நல்லதல்லவா? ஏனெனில் எதிர்காலத்தில் இப்பெயர்கள் மிகப் பிரபல்யம் ஆகவும் கூடும்.

– சரண்யன் –

# விளையாட்டு விழா!


அவ்வகையில் 21 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் கொழும்பு புனித பிறிஜட்ஸ் கொன்வன்ட் மாணவி அனுஷ்கா ஆன் பெரேரா 13.1 செக்கனில் ஓடி இலங்கையின் அதிவேக பாடசாலை வீராங்கனையாகியுள்ளார். 21 வயது ஆண்கள் பிரிவில் 100 மீற்றரை வட-கிழக்கு மாகாணத்தில் அமைந்திருக்கும் திருகோணமலை ஆர்.கே.எம். கோணேஸ்வரா இந்து வித்தியாலத்தைச் சேர்ந்த ஜே. நிரஞ்சன் 11.2 செக்கனில் ஓடி முடித்து இலங்கையின் அதிவேக பாடசாலை மாணவன் என்ற பெருமையைப் பெற்றுக்கொள்கின்றார்.

**மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் பின்வருமாறு தர நிலை அமைகின்றது.**

| | | |
|---|---|---|
| மேல் மாகாணம் | - | 658 |
| வடமேல் மாகாணம் | - | 433 1/2 |
| மத்திய மாகாணம் | - | 370 |
| தென்.மாகாணம் | - | 258 |
| சப்ரகமுவமாகாணம் | - | 222 |
| வடமத்திய மாகாணம் | - | 166 |
| ஊவா மாகாணம் | - | 69 |
| வட-கிழக்கு மாகாணம் | - | 31 1/2 |

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# எதிர்கால நட்சத்திரம்



சிவோதயன்

சதுரங்க விளையாட்டில் தேசிய ரீதியில் கலந்துகொள்ளும் யாழ்ப்பாண வீரர்களைத் தெரிவுசெய்யும் போட்டியொன்றின்போது எமது மண்ணின் சிறந்த சதுரங்க வீரர் ஒருவரைச் சந்திக்க முடிந்தது. V.T.S. சிவோதயனுடைய சதுரங்கப் பிரவேசம் 1991 இல் கோண்டாவில் YMHA நடத்திய மாவீரர் நினைவு சதுரங்க போட்டியுடன் ஆரம்பமானது.

அப்போது அவருக்கு வயது பதின்மூன்று மட்டுமே. தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மூன்றாம் வருட விஞ்ஞானபீட மாணவனும், தன்னை யாழ். இந்துவின் மைந்தன் என்றும் அறியத்தருகிறார். 1990இல் தனது சதுரங்க வாழ்வை ஆரம்பித்த இவர் 1993இல் யாழ்.இந்துவின் சார்பில் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் மாவட்டச் சாம்பியனாகினார். தொடர்ந்து, "1994 இல் க.பொ.த சா/த மாணவனாக இருக்கையில் வயதுக் கட்டுப்பாடற்ற சதுரங்கப் போட்டியில் (தனிப்பட்ட) மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டார். "இந்தக் கால கட்டத்தில் நாங்கள் (பாடசாலையின் இன்னும் இரண்டு வீரர்களான குமணா, ஆதவன்) உலகச் சாம்பியன்கள் என்ற



ஒரு இலட்சியத்துடனேயே விளையாடினோம்" என்று அந்த வயதின் உணர்வுகளை வெளிப்படுத்தும் அவர் தொடர்ந்து, சதுரங்க விளையாட்டுக்களைப் பதிவு செய்த நிறையப் புத்தகங்களை வாசித்தோம். எங்கள் கனவுகளை வளர்த்துக் கொண்டோம். ஆனால் வசதி வாய்ப்புகள் குறைவு. போக்குவரத்துப் பிரச்சினைகள். இதனால் எங்கள் கனவுகளும் கலைகின்ற சூழல் ஏற்பட்டது என்றவரிடம், அப்படியாயின் இலங்கை சதுரங்கப் பரப்பில் ஒரேயொரு தமிழ் வீரனாக தேசிய மட்டத்தில் எவ்வாறு அங்கீகாரம் பெற்றீர்கள் என்று வினவினோம். இது மிகக் கடுமையான பாதையாக, மிகக்கடும் பயிற்சிகளைக் கொண்டதாக இருந்தது. நிறையப் படிக்கவேண்டும். அந்தக்காலகட்டம் போட்டோப்பிரதி எடுப்பதே பெருஞ் செலவு. எனவே பெரிய பெரிய புத்தகங்களை இரவல் வாங்கி அவற்றை முழுதாகவே கைகளால் எழுதிக் கொண்டேன் என்று பயிற்சிக் கொப்பிகளில் எழுதியவற்றைக் காட்டினார்.

96 இல் மீளக் குடியமர்ந்தபின் சதுரங்கத்தின் வளர்ச்சி இன்னொரு வகையில் பாதிப்புக்குள்ளாகியது. சதுரங்கத்தில் துல்லியமான அறிவு பெற்றிருந்த பலர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிவிட்டனர். இது என்னைப் போன்ற ஆர்வம் கொண்ட பலருக்கும் பெரும் இழப்பாக இருந்தது. ஆனாலும் எனது கடும்பயிற்சியால் எனது தரத்தை நான் தக்கவைத்துக்கொண்டேன் என்பவர், டாக்டர் நைல்ஸ் நினைவுச் சுற்றுப்போட்டியில் 98 இல் இருந்து 2001 தவிர 2002வரை சாம்பியன் பட்டம் வென்றேன் எனக் கூறுகிறார்.

இவரது சாதனைகள் பற்றிய கலந்துரையாடலின் ஊடே யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றியும் அறிந்து கொள்ள முடிந்தது. இதனை ஆரம்பித்த பேராசிரியர் என்.ஞானரட்ணம், வேலணைப் பிரதேசசெயலர் எஸ்.ரட்ணம், ரீ.அருணகிரிநாதன், ஏ.முரளிதரன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இளைஞர் மத்தியில் சதுரங்கத்தை வளர்க்கவேண்டும். அவர்களைத் தேசிய, சர்வதேச மட்டத்தில் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என்ற உயரிய நோக்கினைக் கொண்டிருந்ததாக சிவோதயன் கூறுகிறார். ஆனாலும் நிதிப்பற்றாக்குறை என்பது சதுரங்க வளர்ச்சியில் பெரும் தடைக்கல்லாக நிற்பதையும் எடுத்துக் காட்டுகிறார். நிறைய பாடசாலைப் பிள்ளைகள், இளைஞர்கள், யுவதிகள் சதுரங்கத்தில் ஆர்வம் கொண்டிருந்தாலும், பரிசில்கள் மற்றும் பரவலாக அறியப்பட்டுப் பெரிதும் பாராட்டுதலும் குறைவாக இருப்பதால், ஆர்வம் குறைந்தவர்களாகி விடுவதாகவும் ஆதங்கப்படுகிறார். இருந்தும் கூட இலங்கைச் சதுரங்கச் சம்மேளனம் கனிஷ்ட தேசிய சதுரங்கப் போட்டிகளுக்கு யாழ்பாணத்தில் இருந்து வீர்களைக் கேட்டபோது யாழ். சதுரங்கச் சம்மேளனத்தின் ஊடாக இன்றைய வீரர்களை அனுப்பி 20 வயதிற்குட்பட்ட பிரிவில் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த சிவப்பிரியா, ஆதித்தன் இருவரும் தேசிய ரீதியில் ஐந்தாம் இடத்தைப் பெற்றது பெரும் சாதனை என்றும் எடுத்துக் காட்டுகின்றார்.



1999இல் JCA நடாத்திய போட்டிகளில் மீண்டும் சிவோதயன் சாம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். தன்னால் தொடர்ச்சியாக சதுரங்கத்தில் உயர் தகைமையைத் தக்க வைத்துக்கொள்வதற்கு முடிந்தது நிறைய சதுரங்கப் புத்தகங்களைப் படிப்பதினாலேயேயாகும் என்பவர், இளைஞர்கள் இதனை மிக முக்கியமாக மனதில் கொள்ள வேண்டும் எனகிறார். தனக்கு தற்போதுள்ள பட்டம் NATIONAL MASTER என்றும் தனது இலட்சியம் தரக் கணிப்பில் 2400 புள்ளிகளுக்கு மேல் பெற்று INTERNATIONAL MASTER ஆவதென்றும் 2500 புள்ளிகளுக்கு மேல் பெற்று INTERNATIONAL GRAND MASTER ஆவது தான் என்றும் கூறினார்.


இதற்கான சந்தர்ப்பத்தைப் பரிசோதிக்கத் தனக்கு தற்போது சரியானதொரு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதைச் சுட்டிக்காட்டும் இவர், தன் இலக்கை நோக்கி முன்னேறத் தடையாக இருக்கும் நிதிப்பிரச்சனையையும் தொட்டுக் காட்டுகிறார். தேசிய வீரர்களுள் ஒருவராகிய சிவோதயனுக்கு இந்தியாவின் மும்பாய், கொல்கத்தா மற்றும் ஜேர்மனி, குறிப்பாகவும் சிறப்பாகவும் ஹங்கேரியில் நடைபெறவிருக்கும் குட்.்.பிறைடே சர்வதேசப் போட்டியிலும் (ஹங்கேரிக்கு இலங்கையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு போட்டியாளர் இவரென்பது குறிப்பிடத்தக்கது.) கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருப்பதாகக் கூறினார். மேற்படி போட்டிகளில் ஹங்கேரி நாட்டில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்வதாயின் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் வரையில் தேவைப்படும் என்றார். "இது ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் இன்னும் நல்ல மனம் படைத்தோர் மனம் வைத்தால் என் கனவை அவர்கள் நனவாக்குவார்கள். போட்டிகளில் குறிப்பிடத்தக்க உயர்தரத்தையும் நான் பெறுவேன்" என்று மிகவும் உறுதியாகவும் தன்னம்பிக்கையுடனும் கூறுகிறார் சிவோதயன்.

சதுரங்க விளையாட்டில் தான் பிரகாசிக்கக் காரணமாக இருந்தவர்களை நன்றியுடன் நினைவுகூரும் இவர்-தன் பயிற்றுனர், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வீ.கணேசலிங்கத்தை குறிப்பாகச் சொல்கிறார். "என் வளர்ச்சியில் பெரும் பங்கு இவருக்கே உரியது. இவரது வழிகாட்டல்கள், இவர்தம் சதுரங்கப் புத்தகங்கள் எல்லாமே பெரும் உதவியாக இருந்தன என்றவர், இன்னொரு ஆசிரியரான அருளானந்தசிவம் எவ்வாறு தன் பாடசாலையில் சதுரங்க விளையாட்டை முன்னேற்ற அரும்பாடுபட்டார் என்பதையும் மனம் கொள்கிறார்.

இறுதியாக - எனது சகோதரர்கள் நால்வரும சதுரங்க விளையாட்டு வீர்களே. இருந்தும் பொதுவான காரணங்களே அவர்களது உற்சாகத்துக்கும் சிறிது தடையாக உள்ளது என்றவர், தனது தாய் தன் வளர்ச்சிக்கு மிகவும் ஆக்கமும் ஊக்கமும் தருபவர். அம்மாவின் பங்கும் என் வளர்ச்சியில் மிகமுக்கியமானது என்று கூறுகிறார்.

இந்த மாதிரியான ஆதரவு எமது இளைஞர், யுவதிகளுக்கும் கிடைக்க வேண்டும். அவர்கள் நிறையப் புத்தகங்கள் படிக்கவேண்டும். பாடசாலைகளில் சதுரங்க விளையாட்டுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். புதிதாக விளையாட வரும் வீரர்களின் ஆர்வம் குறைந்து விடாதபடி அவர்களைத் தொடர்ந்து ஊக்குவித்துக் கொண்டிருக்க வேண்டும். இந்த நிலை எல்லோருடைய ஆதரவின் மூலமே நிறைவேற இயலும் என்னும் சிவோதயன் - தற்போது தனக்கு வெளிநாடுகளில இருந்து அழைப்புகள் கிடைப்பது போல எதிர்காலத்தில் இன்னும் பலருக்கு இச்சந்தர்ப்பங்கள் கிடைக்கும். அதற்கு மேற்கண்ட ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும், யாழ்ப்பாண மாணவ வீரர்கள் சர்வதேச மட்டத்தில் சதுரங்கத்தில் உயர்வடைவது இலகுவானதென்றவர், தான் வெளிநாட்டுப் போட்டிகளில் பங்குகொள்வதும் நிறைவேறும் என நம்புகிறார்.

இவரின் கனவு நனவாகும் எனில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சதுரங்க விளையாட்டின் பெரும் எழுச்சிக்கு இது ஒரு வித்தாக அமையும் என்று கூறலாம். இலங்கை



# இது நிச்சயம் பிரகாசிக்கும்

சதுரங்கச் சம்மேளனத்தின் தலைவர் டெரிக் பெரேராவின் கூற்றை இங்கு குறிப்பிடலாம். "இந்தியாவின் விஸ்வநாத் ஆனந்த், சசிகரன், விஜயலக்ஷ்மி ஆகியோர் சதுரங்க உலகில் வலுவான நிலையில் உள்ளனர். அதேபோல இலங்கைத் தமிழர்களும் உலகளவில் பிரகாசிக்க வாய்ப்புள்ளதாக நான் நம்புகிறேன்."

எமது மண்ணின் மைந்தன் சிவோதயனுக்கும் அதன் தொடர்ச்சியாக எம் இளம் சந்ததிக்கும் சதுரங்க உலகில்




ஒரு உன்னத நிலை கிடைக்க உதவுவதற்கு நாம் எந்த வகையில் பங்களிப்புச் செய்யப்போகின்றோம்?

**- நிர்மலன் -**

## விளையாட்டு ஆர்வலர்களுக்கு...

**ஏற்கனவே முதலாவது விளையாட்டு அரங்கின் மூலம் உங்களிடம் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டோம். அந்தவகையில் கடிதங்கள் மூலமும், நேரடியாகவும் நீங்கள் காட்டும் ஆர்வம் எங்களுக்கு மேலும் மேலும் உற்சாகத்தைத் தருகின்றது. தொடர்ந்து எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள். இலைமறை காயாக ஒளிந்திருக்கும் எம் மண்ணின் மைந்தர்களைப் பிரபல்யப்படுத்த, அவர்களை வளர்த்தெடுக்க உங்கள் தொடர்புகள்தான் உறவுச் சங்கிலியாக அமையப்போகிறது.**

**மண்ணின் பெருமையை உலகறியச் செய்வதில் விளையாட்டு வீரர்களின் சாதனைகளும் பெரும்பங்கு வகிக்குமல்லவா?**

நன்றிகளுடன்
- நிர்மலன்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*ஒளிவு மறைவு அற்ற நட்பே
உண்மையான நட்பாகும்.*

- கிறகரி

# நமது நோக்கு

## கிழக்கில் அமைதி தொடர....

**கிழக்கு மாகாணத்தில் தொடரும் - அமைதிக்குக் குந்தகமான திட்டமிட்ட முயற்சிகளில் மற்றொன்றும் தோல்வி கண்டிருக்கின்றது.**

**தமிழ், முஸ்லிம் மக்களின் பொறுமையும், விடுதலைப் புலிகளினதும் படையினரதும் ஒத்துழைப்பும் - பெரும் இரத்தக்களரி ஒன்று ஏற்படுவதைத் தடுத்ததுடன் சமாதானத்தைக் குழப்ப நினைப்போரின் திட்டங்களும் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளன.**

**காஞ்சிரங்குடா, திருமலைச் சம்பவங்களின் தொடர்ச்சியாக - அம்பாறையில் 'திடீரெனக்' காணமற்போன முஸ்லிம் இளைஞன் விவகாரத்தைக் கொண்டு, தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தவும் - அதனூடாக இன வன்செயல்களைத் தூண்டவும் சிலர் மேற்கொண்ட முயற்சிகளின் பின்னணி வெளித் தெரிய வந்துள்ளது.**

**இந்தப் பின்னணியில் கிழக்கின் முக்கிய முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரினது பக்க பலம் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் - சமாதானத்தை எரித்து, அதன் தீயில் குளிர்காய விரும்புபவர்கள் பற்றியும், அவர்கள் தேட நினைக்கும் அரசியல் ஆதாயங்கள் தொடர்பாகவும் தமிழ், முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது.**

**சமாதானத்துக்கான நகர்வுகள் இருதரப்பிலுமான பரஸ்பர புரிந்துணர்வுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் போது, இவை போன்ற சம்பவங்கள் இனியும் தொடரப்படலாமென்ற எச்சரிக்கையையும் மக்கள் மனதிற் கொள்வது நன்றென்றே உணரப்படுகின்றது.**

**கிழக்கு நிலவரத்தைப் பொறுத்தவரை - தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே காலத்துக்குக் காலம் இன விரோதத்தைத் தூண்டும் சம்பவங்கள் நடை பெற்றுவந்துள்ளன. அவ்வாறான நிலையில், எளிதில் பூசல்களைக் கிளப்பும் விதமாக - உணர்வு மையமான பகுதிகளிலும் சமாதானத்தின் எதிரிகள் தம் கைவரிசையைக் காட்டக் கூடும்.**

**இதனைத் தவிர்ப்பதற்காக - அக்கரைப்பற்றில் கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்ட - இரு சமூகங்களினதும் அமைதிகாத்தல் முயற்சிகளும், வெளிப்படையான போக்குகளும் எதிர் காலத்திலும் தொடரப்படல் வேண்டும்.**


**வடக்கு, கிழக்கின் ஒட்டுமொத்த சுபீட்சத்திற்கு, தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் நெருக்கமான பிணைப்பும், பரஸ்பரம் சந்தேகங்களைக் களைந்து கொள்வதும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.**

**இரு சமூகங்களுக்கிடையிலான நேரடித் தொடர்பும் - அடுத்த கால இடைவேளைகளிலான சந்திப்புக்களும் - குறுகிய அரசியல் நோக்கங் கொண்டோரின் செயற்பாடுகளை ஒதுக்கித் தள்ள வைத்துவிடும்.**

**தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் ஒருங்கிணைப்பின் மூலமே - நிரந்தர சமாதானத்துக்கான சூழல் கிழக்கில் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெளிவாக ஏற்றுக் கொண்டு செயற்படுவதன் மூலம் - அக்கரைப்பற்றுச் சம்பவம் போன்ற 'திட்டமிட்ட' செயல்களை அவை ஆரம்பிக்கப்படும் கணங்களிலேயே துடைத்தெறியவும் முடியும்.**

# அக்கரைப்பற்று இளைஞர் கடத்தல் சூத்திரதாரி மீது உடன் நடவடிக்கை

## அலரி மாளிகை மாநாட்டை அடுத்து பிரதமர் உத்தரவு



(கொழும்பு)

அக்கரைப்பற்றில் இளைஞர் ஒருவரைக் கடத்தி இரு சமூகங்களுக்கிடையில் கலவரத்தை உருவாக்க முயன்ற சூத்திரதாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கிழக்கு பிராந்திய நிலைமை குறித்து ஆராய்வதற்கு அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இரவு கூட்டப்பட்ட மாநாட்டில் வைத்தே இவ்வாறு அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பிரதமரின் பணிப்பின்பேரில் நேற்றுமுன்தினம் காலை அக்கரைப்பற்றுக்கு சென்ற அவரின் பிரதிநிதி அங்குள்ள நிலை குறித்து இந்த மாநாட்டில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார்.

இதனையடுத்து இந்த சம்பவத்தின் பின்னணியில் இருந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி அவர் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர்களான திலக் மாரப்பன, கே.என்.சொக்ஸி, கரு ஜெயசூரியா, ஜோன் அமரதுங்க, உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட் ஆகியோர் இம் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

சீனி முகமது அப்துல் பஜாத் என்ற இளைஞர் கடந்த 15ஆம் திகதி அக்கரைப்பற்றில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து ஊரடங்கு சட்டமும் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் அவரது வீட்டிலிருந்து பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டார்.

தன்னைக் கடத்தியவர்கள் இறக்காமத்தில் முதல் நாள் இரவு விடுவித்ததாகவும், பின்னர் அன்று காலையே வீடு வந்து சேர்ந்ததாகவும் அவர் பொலிசாருக்கு தெரிவித்தார்.

இதேவேளை- கடத்தப்பட்டதாக கூறப்பட்ட நபர் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டிலேயே இருந்ததாக கூறப்படுகின்றது. இது குறித்து விசாரணைகளை துரிதப்படுத்தி சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளதாக தெரியவருகிறது.

சமாதானச் சூழ்நிலையைக் குழப்பும் நோக்கில் திட்டமிட்டுச் செயற்பட்ட இந்தக் கடத்தலுடன் முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா தொடர்புபட்டிருந்ததாக கூறப்படுகின்றது.

ஆனால்- அதாவுல்லா தனக்கும் இந்தச்சம்பவத்திற்கும் தொடர்பில்லை என மறுத்துள்ளார். இதேவேளை ஈ.பி.டி.பிக்கும் இக்கடத்தலுக்கும் தொடர்புடையதாக இன்னொரு தரப்பில் இருந்து குற்றச்சாட்டு எழுந்தது ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா இக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

அக்கரைப்பற்றுச் சம்பவத்தில் தொடர்பு பட்டதாக கருதப்படும் அதாவுல்லா மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருவதாக தெரியவருகிறது. இது தொடர்பாக ஆராய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பொர்னான்டோ நேற்று அக்கரைப்பற்றுக்கு சென்றிருந்தார்.

இதேவேளை- உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, இந்தக்கடத்தல் சம்பவத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குத் தொடர்பு இருப்பதாக வலுவான சந்தேகங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக விடுதலைப்புலிகளே முஸ்லிம் இளைஞர்களைக் கடத்தியதாக வதந்தி பரப்பப்பட்டு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தமையும் இதனால் அங்கு தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடிய அபாயநிலை எழுந்ததும குறிப்பிடத்தக்கது.

# மீளக் குடியமர்ந்தோருக்கு யூ.என்.எச்.சி.ஆர். உதவி

(புன்னாலைக்கட்டுவன்)

அண்மையில் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து வந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் அன்றாடப் பாவனைப் பொருட்களை குப்பிளான் தெற்கு கிராம சேவகர் அலுவலகத்தில் வைத்து 17ஆம் திகதி வழங்கியது.

மேற்படி அலுவலகத்தில் வைத்து- புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினை, ஏழாலை மத்தி, குப்பிளான் வடக்கு மற்றும் குப்பிளான் தெற்கு ஆகிய ஆறு கிராம சேவகர் பிரிவில் மீளக் குடியமர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கே இப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு வாளி, உடுபுடவைகள், போர்வைகள், விளக்கு, சாப்பாட்டுக் கோப்பைகள் மற்றும் குவளைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

# வீதியில் கற்குவியல்கள் பொதுமக்கள் பாதிப்பு

புன்னாலைகட்டுவன் தெற்கு ஆஸ்பத்திரி வீதியை செப்பனிடுவதற்கெனப் பறிக்கப்பட்டு நீண்ட காலமாக காணப்படும் கற்களால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

பகல் வேளையில் இ[illegible]தியூடாக போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள், பாதசாரிகளும் சிரமப்படுவதனையும்- இரவு வேளையில் பயணம் செய்வோரும் இக் கற்குவியல்களுக்குள் விழுந்து காயம் அடைவதையும் காணமுடிகின்றது.

பருவமழை காலம் ஆரம்பித்துள்ளதால், இவ்வீதியை விரைவாக செப்பனிடுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (83)

# மல்லாகம் பொதுச்சந்தையை மீள இயக்க வலி. வடக்குப் பிரதேச சபை நடவடிக்கை

(வலி-வடக்கு)

மல்லாகம் பொதுச் சந்தைக் கட்டடத்தின் பரிதாப நிலை குறித்து பொதுமக்கள் மத்தியில் விமர்சனங்கள் எழுந்துள்ளதால் இச்சந்தையை செயற்பட வைப்பது குறித்து வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வலி.வடக்கு பிரதேச சபையினால் 1999ஆம் ஆண்டு வேலைகள் பூர்த்தியாகி திறந்து வைக்கப்பட்ட மல்லாகம் பொதுச் சந்தை கடந்த 3 வருடங்களாக சரிவர இயங்கமுடியவில்லை. ஓரிரு கடைகளைத் தவிர ஏனையவை பூட்டிய நிலையிலேயே இருந்து வருகின்றன.

9 பரப்புக் காணியில் 12 லட்சம் ரூபா செலவில் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட இச்சந்தை செயற்பட முடியாமல் இருப்பது குறித்து பொதுமக்கள் மத்தியில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மிக அண்மையில் சுன்னாகம் சந்தை செயற்படுவதாலும், மல்லாகத்தைச் சூழவுள்ள விவசாயிகள் கூட சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளுக்கு உற்பத்திப் பொருட்களை கொண்டு செல்வதாலும், ஏனைய பகுதிகளைப்போல் மல்லாகம் பகுதியில் குடிசனம் அதிகமாக இல்லாததாலும் இச்சந்தை சிறப்பாக செயற்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இச்சந்தையை வாரத்தில் ஓரிருநாள் கட்டாயச்சந்தையாகவோ அல்லது இரவுச் சந்தையாகவோ அல்லது சந்தையைத் தவிர்த்து வேறு பயன்பாட்டிற்கோ உபயோகிக்கலாம் என ஆலோசனைகள் தெரிவிக்கப்படுகின்றன.

எந்த வகையிலாவது இச்சந்தையை செயல்பட வைக்க வலி.வடக்கு பிரதேசசபைத் தலைவர் திருமதி. பா.ஸ்ரீபாஸ்கரன் துரித நடவடிக்கை எடுத்துவருகின்றார். (105)

# சொந்த வீடுகளுக்குத் திரும்ப விடுங்கள்! பாஷையூர் கடற்கரை வீதி மக்கள் கோரிக்கை!!

பாஷையூரில் உள்ள கடற்கரை வீதியில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு இப்பகுதி மக்கள் பொதுநிறுவனங்களுக்கும் இராணுவத்தின் கட்டளை அதிகாரிக்கும் விண்ணப்பித்துள்ளனர்.

அண்மையில் வன்னிப் பகுதில் இருந்தும் மன்னார் பகுதியில் இருந்தும் பாஷையூர்ப் பகுதியில் மீளக்குடியமர்ந்தவர்கள் கடற்கரை வீதியில் உள்ள தமது சொந்த வீடுகளில் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இந்த வீதிக்கு வடக்காக உள்ள பல வீடுகள் இராணுவத்தினரின் கம்பி வேலிக்குள் அடக்கப்பட்டுள்ளன. இறுக்கமான பாதுகாப்பு பகுதியாக கருதப்படும் இந்தப்பகுதியின் நிரந்தரக் குடியிருப்பாளர்கள்- தமது வீடுகளை கடற்கரை வீதியூடாக பாவிக்க அனுமதிக்காவிடினும் பின்புறமாக உள்ள ஒழுங்கைகள் மற்றும் உறவினர் வீடுகள் ஊடாக பாவிப்பதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப்பகுதியில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்படாத ஆட்கள் இல்லாத வீடுகள் உள்ளன. இந்த வீடுகளில் குடியமர்வதற்கு அனுமதிக்குமாறும் மக்கள் கேட்டுள்ளனர்.

கடற்கரை வீதி பொதுமக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவில்லை. குறித்த நேரத்தில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் மட்டுமே துறைமுகப்பகுதியில் உள்ள நுழைவாயில் மூலம் அனுமதிக்கப்படுகின்றனர். இதுதொடர்பான முறைப்பாடுகள் யாழ். பொதுசனத் தொடர்பு அதிகாரி அலுவலகத்திற்கும் கண்காணிப்புக் குழுவினருக்கும் யாழ். அரச அதிபருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதி (கொழும்புத்துறை) யின் இராணுவக் கட்டளை அதிகாரிக்கும் இப்பகுதி மக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (54)

# 'நூல் தேட்டம்' ஆசிரியர் யாழ்ப்பாணம் வருகிறார்



நூல் தேட்டம் ஆசிரியரும், நூலகருமான பொன்.செல்வராஜா தொகுத்த ஈழத்து எழுத்தாளர்களின் ஆயிரம் நூல்களைப் பற்றிய விவரங்கள் கொண்ட 'நூல் தேட்டம்', 'யாழ்ப்பாண நூலகம ஒரு ஆவணம்' ஆகிய இரு நூல்களின் அறிமுகம் 26ஆம் திகதி கொழும்புத் தமிழ் சங்கத்தில் நடைபெறவுள்ளது. இம்மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள நூலகர் பொன்.செல்வராஜா தொகுக்கும் 'நூல் தேட்டம்' இரண்டாம் பதிப்புக்கும் லண்டனில் உருவாக்கும் இலங்கை எழுத்தாளர்களின் ஆவண காப்பகத்திற்கும் உதவ யாழ். மாவட்ட எழுத்தாளர்களை அவர் சந்திக்கவுள்ளார்.

# மாற்று அரசாங்கமா? பொதுத் தேர்தலா?

# குழப்பமுடன் சூடாகிறது தென்னிலங்கை!

**தெற்குத் திசையினிலே ....**

**- கொழும்பிலிருந்து இந்திரஜித்**

சமாதான முன்னெடுப்புகள் பல்வேறு புறத் தடங்கல்களுக்கு மத்தியிலும் நிதானமாக நகர்கின்றன.


தாய்லாந்து முதற்கட்டப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் கூட்டுச் செயலணி என்ற அடிப்படைத் தொடர்பை தலைமைத்துவத்துடன் ஆராயுமுகமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னி வந்திருக்கிறார். அவரையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் கூட்டுச் செயலணி மற்றும் வடக்கு-கிழக்கின் அதியுச்ச பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் சந்தித்துப் பேச, இனப்பிரச்சினை தீர்வின் முன்னெடுப்பாளர்களான நோர்வேக் குழுவினர் இங்கு வரவிருக்கின்றனர்.

இந்த நிலையில் பல்வேறு சர்வதேசப் பிரதிநிதிகள் இலங்கையின் தீர்வு முன்னெடுப்புக்களை நேரில் ஆராயும் பொருட்டு வடக்கிற்கு நாளாந்தம் விஜயங்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விஜயங்களின் பின்னர் அவர்கள் கொழும்பில் நடத்தும் ஊடகவியலாளர் சந்திப்புகளில் - தமது நாடுகள் இலங்கையின் சமாதானத்திற்கும், அபிவிருத்திற்கும் உதவி வழங்கப் போவதாக தெரிவித்து வருகின்றனர்.

எகிர்வரும் நவம்பர் 25ம் கிககி ஒஸ்லோவில் நடைபெறவிருக்கின்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் - இலங்கைக்கு பாரிய நிதி உதவிகள் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இவை இலங்கை அரசாங்கத்தின் நம்பிக்கையின் அடிப்படையில் கிடைக்கும் உதவிகளல்ல என்பது தெளிவானது. போரினால் அழிந்துள்ள வடக்கு - கிழக்கின் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கூட்டுச் செயலணியில் நம்பிக்கை வைத்தே இந்த உதவிகள் இலங்கைக்கு கிடைக்கவிருக்கின்றன.

இதேபோல - இனப்பிரச்சினை தீர்வை நோக்கிய முன்னெடுப்பில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் தென்னிலங்கை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் அது தன்பால் எதிர்நோக்கியுள்ள சவால்களும் பெரிதாக இலங்கை மக்கள் மத்தியில் கிலேசங்களை தோற்றுவித்திருக்கின்றன.

ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்ட 19ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் உயர் நீதிமன்ற இரகசியச் தீர்ப்பு வெளியே கசிந்துவிட்டது. உரிய முறையில் நாடாளுமன்றத்தில் சபாநாயகரால் இந்த இரகசியத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், வழமையாக இவ்வாறான இரகசியத் தீர்ப்புகள் ஜனாதிபதிக்கும் அனுப்பப்படும் வழமைப்படி இந்தமுறை ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட இரகசிய தீர்ப்பே வெளியே கசிந்துள்ளது. இதற்குப் பிரதான காரணம் ஜனாதிபதியும் நாடாளுமன்றத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிரதமரும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்பதேயாகும்.



ரணில் சந்திரிகா மஹிந்த ராஜபக்ஷ பிரதம நீதியரசர் சரத் என். சில்வா


உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட அன்றிரவே கொழும்பின் குறிப்பிட்ட நாளிதழ்களில் - தகவல்கள் என்ற அடிப்படையில், தீர்ப்பின் உள்ளடக்கம் வெளியாகிவிட்டது. இத்தருணத்தில் இருந்து பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் அடுத்த கட்ட அரசியல் நகர்வுக்கான ஏற்பாடுகளை ஆரம்பித்து விட்டன.

இவ்வாறு இந்த இரண்டு கட்சிகளும் நகர்வை மேற்கொள்ளும் வகையில் உந்தியது - . உயர் நீதிமன்றத்தின் 7 பேரடங்கிய நீதியரசர் குழு அரசாங்கத்தின் 19ஆவது அரசியலமைப்புக்குச் சாதகமற்ற தீர்பை வழங்கியமையேயாகும்.

ஒரு வருடத்திற்குள் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களை இல்லாதொழிக்கும் ஐக்கிய முன்னணியின் முன்னெடுப்பு, இந்த தீர்ப்பின் மூலம் பின்னடைவைச் சந்தித்துள்ளதாக கூறப்படுகிறது. ஜனாதிபதியின் ஒரு வருட நாடாளுமன்றக் கலைப்பு கால வரையறையை 3 வருடமாக மாற்றுமாறு அந்த தீர்ப்பில் உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

19ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை நிறைவேற்றியே தீர வேண்டும் என்ற அவசியம் அரசாங்கத்துக்கு இருக்குமானால், சீர்திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையைப் பெற வேண்டும். அதேநேரம் - இது சம்பந்தமாக பொதுஜன வாக்கெடுப்பும் நடத்தப்படவேண்டும் என்பதே உயர் நீதிமன்றத்தினால் இதுவரை உத்தியோகபூர்வமாக வெளியிடப் படாத இரகசியத் தீர்ப்பின் உள்ளடக்கமாகும்.

சம்பந்தப்பட்ட தீர்ப்பின் தாக்கம் இன்று தென்னிலங்கை அரசியலில் கடும் வேகமாக உணரப்படுகிறது. பிரதான ஐக்கிய தேசியக் கட்சி 19ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் - பொதுஜன வாக்கெடுப்புக்குச் செல்லாமல் இனப்பிரச்சினைத் தீர்வை முன்வைத்து மக்கள் முன் பொதுத் தேர்தலை கொண்டு செல்வதே சிறந்தது எனக் கூறுகிறது. எனினும் அந்த கட்சிக்குள் பெரும்பாலானோர் இதற்கு மாற்றுக் கருத்துக்களினை முன்வைத்துள்ளனர். நாடு இன்று இருக்கும் நிலையில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கான அவசியம் இல்லையெனவும், ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை கொண்டு வருதல் போன்ற மாற்றுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் உணர்த்தியுள்ளனர். இதில் சிலர் தமது அரசியல் எதிரியான ஜனாதிபதியுடன் இணைந்து மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கும் நிலைப்பாடு குறித்தும் ஆராய்ந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி அரசில் அமைச்சராக இருக்கும் மலையகத் தலைவர் ஒருவரும் ஏனைய 4 ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியைக் கடந்தவார இறுதியில் சந்தித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கு முன்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதான உறுப்பினர் ஒருவர் - ஜனாதிபதியைச் சந்தித்த போதும் அதில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. மறுபுறத்தில் பொதுஜன முன்னணி இத்தகைய மாற்று அரசாங்கம் ஒன்றுக்கு இணக்கத்திற்கு வந்துள்ளபோதிலும் அதில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க இடம் பெறுவதை விரும்பவில்லை. எனினும், ஐக்கிய தேசிய கட்சியில் அடுத்து இருக்கும் முக்கிய இரண்டு முதன்மையாளர்களை இணைத்துக் கொண்டு மாற்று அரசாங்கத்தைக் கொண்டு செல்லவே பொதுஜன முன்னணி விரும்புகிறது. இந்த மாற்று அரசாங்கத்தில் ஏற்கனவே தம்மை நன்னடத்தை என்ற அடிப்படையில் காப்பாற்றிய மக்கள் விடுதலை முன்னணிக்கு - பிரதான இடத்தை அளிக்க பொதுஜன முன்னணி விருப்பம் கொண்டுள்ளது.



அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸவும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும்.

இதற்கிடையில் மாற்று அரசாங்கக் கொள்கையை வெளியிட்டிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளும் உட்பூசல்கள் தொடர்கின்றன. முன்னணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அனுரா பண்டாரநாயக்காவை முன்னிலைப்படுத்த முனைகிறது. அதே நேரம் - எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை பின்னிலைப்படுத்துவதற்கான தீவிர முயற்சிகளும் எடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இதன் ஒரு கட்டமே அண்மையில் கூட்டப்பட்ட பொதுஜன முன்னணியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் அழைக்கப்படாமையும், அவரால் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு கட்சியினால் தடை விதிக்கப்பட்டமையுமாகும்.

மக்கள் விடுதலை முன்னணி தமது கொள்கையின்படி - உட்பூசல்களை இதுவரை பெரிதாகச் சந்திக்காதபோதும், மாற்று அரசாங்கத்திற்குள் வர முயற்சிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி, மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி என்பன பலமில்லாத நிலையிலேயே தமது கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. இது மாற்று அரசாங்கத்துக்கான பலவீனமான நிலையாகும்.

அரசாங்க கட்சிகளிலேயே அங்கம் வகிக்க முயற்சிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன தற்சமயம் பல்வேறு உள்ளக மற்றும் புறக்காரணிகளால் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

மலையக மக்கள் முன்னணி வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கிறது. சிஹல உறுமய - சிக்கல்களின் மத்தியில் தனது செல்வாக்கை இழந்திருக்கிறது. ஏனைய இடதுசாரிக் கட்சிகள் தமது அடிப்படைக் கொள்கைகளை அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான நிலை ஒன்றின் கீழ் மாற்று அரசாங்கம் அமைக்கப்படுமானால் அல்லது பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் நிலைமை எப்படியாயிருக்கும்?. பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் - புதிய நியமனங்களைக்கூட செய்ய வேண்டாம் எனத் திணைக்களங்களுக்குத் தற்சமயம் கூறியுள்ள அரசாங்கம், தனியார்மயக் கொள்கைகளை முன்வைத்து பாரிய எதிர்ப்புகளுக்கு முகம் கொடுத்து வரும் அரசாங்கம், தொடர் கட்டண அதிகரிப்புகளையும், விலையுயர்வுகளையும் செய்து வரும் அரசாங்கம், சமாதான முன்னெடுப்பை மட்டும் காட்சிப்பொருளாகக் கொண்டு 2/3 பெரும்பான்மையைப் பெற முடியுமா? என்ற கேள்வி தொக்குகின்றது.

அதேநேரம் - மாற்று அரசாங்கம் ஒன்றை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆரோக்கியமான சூழ்நிலை இலங்கை அரசமைப்பின்படி தற்போதைக்கு இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கட்சி மாறலுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமானால், அது மாற்று அரசாங்கத்தின் காலத்தை மூன்று மாதங்களுக்கு மட்டுமே உயிர்வாழவைக்கும். ஏற்கனவே சரத் அமுனுகம உட்படச் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி நல்லிணக்க அரசாங்கம் என்ற அடிப்படையில் பொதுஜன முன்னணியுடன் இணைந்த போது அவர்களுக்கு 3 மாதங்களுக்கு தொல்லைகள் எதுவும் இடம் பெறவில்லை. 3 மாதங்களின் பின்னர் அவர்கள் மீது ஐக்கிய தேசியக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தமையால், நாடாளுமன்றப் பதவிகள் பறிபோகும் நிலை ஏற்பட்டது. இந்த உதாரணம் தற்போதைய சூழ்நிலையிலும் பொருத்தமான ஒன்றே.

எனவே - இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் தற்சமயம் அரசாங்கம், பொதுத்தேர்தல் ஒன்றைக் காட்டிலும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்த தேசிய அரசாங்கத்தை நோக்கி நகர்வது சிறந்த பலனைத் தரும். இதனை நாடாளுமன்ற உறுப்பினர் A.H.M. பௌஸியும் ஏற்றுக்கொண்டுள்ளார். அவ்வாறு தேசிய அரசாங்கம் ஒன்று ஏற்படுமானால் நடைமுறையிலுள்ள சமாதான நகர்வுக்கு பாரிய பின்னடைவுகள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

அல்லது - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், 19ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்ற ஆணைப்படி - ஜனாதிபதி நடாளுமன்றத்தை கலைக்கும் 3 வருட வரையறையை ஏற்றுக் கொண்டு செயற்படுவது - அதன் சுமாரான நகர்வு மற்றும் அபிவிருத்தி என்பவற்றை ஸ்திரப்படுத்துவதுடன் அடுத்த தேர்தலுக்கான ஆரோக்கியமான சூழ்நிலையையும் தரும். மறுபுறத்தில் பொதுஜன முன்னணியும் இந்த மூன்று வருடகாலப்பகுதியில் அடுத்த தேர்தலுக்கான நடவடிக்கைகளில் நிதானமான நகர்வைச் செலுத்த முடியும். எது எப்படியிருப்பினும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நடைமுறைச் சமாதான நகர்வை ஐக்கிய தேசிய முன்னணியும், பொதுஜன முன்னணியும் இடையில் முறித்துக் கொள்ள விரும்பவில்லை என்பதே தென்னிலங்கை அரசியலின் இன்றைய நிலை.

ஐக்கிய தேசியக் கட்சியைப் போலவே, பொதுஜன முன்னணியும் மாற்று அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் நிலையில் - வேறு தரப்பின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணக்கமொன்றை முன்னெடுத்துச் செல்லத் திட்டம் ஒன்றை செயற்படுத்தும் முறையில் ஆர்வம் காட்டி வருவது இதற்கு ஒரு உதாரணமாகும்.


எனினும் - இங்கு குறிப்பிட்டு கூற வேண்டிய முக்கிய கருத்து, தென்னிலங்கையின் இருபெரும் கட்சிகளின் இணக்கம் எட்டப்படாமல் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வின் கால வரையறையை எந்தத் தரப்பினாலும் வரையறுக்க முடியாது என்பதேயாகும்.

THE TAMIL MEET OF HUMANITY 2002

# மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002

## முதலாம் நாள் நிகழ்வுகள்





விழா நடைபெற்ற மண்டபத்துக்கு அருகிலிருக்கும் தந்தை செல்வா நினைவுத்தூபியை முதலாவது படத்திலும்,


தமிழகத்திலிருந்து வருகை தந்த புகழேந்தி,திருமாவளவன், பா.செயப்பிரகாசம் ஆகியோர் நிகழ்வுகளைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும்,

திருமாவளவனுடன் எமது செய்தியாளர் உரையாடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள் - விதுர்சன்)

## மனித உணர்வுகள் நசுக்கப்பட்ட போது எழுந்ததே தமிழர்களின் போராட்டம்!

### தொடக்கவுரையில் சிவத்தம்பி



(நமது நிருபர்)

மானுடத்தின் குரல் என்பது தனியே தமிழ் மக்களுக்கு உரியதல்ல. அது உலகத்துக்கு பொதுமையானது. அடக்குமுறை எங்கு ஓங்குகிறதோ அங்கெல்லாம் மானுடத்தின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் என நேற்று நடைபெற்ற 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' மாநாட்டில் தொடக்கவுரையாற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பி தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்- ஒவ்வொரு நாட்டிலும் மனிதர்கள் நசுங்கிக் கொண்டிருக்கும் போது மானுடத்தின் குரல் ஒலித்துக் கொண்டிருக்கும். அது மொழியால் வேறுபடுவதல்ல. தமிழ் மானுடத்தின் குரல் என்பது தமிழ்த் தொன்மை காரணமாகவோ அது நீண்டகால வரலாறு உடையது என்பதாலோ அது மானுடத்தின் குரலாகின்றது என்பதல்ல. அது எப்பொழுது தனது கருத்தியலை, தனது வடிவத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும். அது தன்னுடைய ஆத்மார்த்தமான மனித உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். அவை எப்பொழுது செயற்படுத்தப்படுகின்றதோ அப்பொழுதுதான் மானுடத்தின் குரலாகின்றது.

அந்த மானுடக் குரலானது மனித உணர்வுகளை மதிக்கின்ற, மனிதனை மனிதனாக மதிக்கின்ற இயல்புகளுடன் பொருந்திக் காணப்பட வேண்டும். மானுடத்தின் உணர்வுகளை நசுக்கும் போது போராட்டம் தோற்றம் பெறுகின்றது. போராட்டம் என்பது வெறுமனே போரைக் குறிப்பதல்ல. போராட்டம் என்பது பல்வேறு வகையிலானது. தர்மத்துக்கான போர், தர்மம் அல்லாத போர் எனப் பாகுபடுத்த முடியும். ஒரு போராட்டம் வரலாற்றில் எப்போதும் அழியாது இருக்க வேண்டும். அப்போது தான் அது தர்மப் போர். மனித உணர்வுகள நசுங்கும் போது விடுதலை வேண்டி எழும் போராட்டமாக இருக்கும். எமது தமிழ் மக்களின் போர் அந்த வகையானதுதான். இந்தப்போர் பல வழிகளில் நிகழ்ந்து வந்துள்ளது. அகிம்சை வழியிலானது, ஆயுதம் ஏந்திய போர் வழியிலானது. எழுத்து வடிவில் எனப் பல்வேறு பரிமாணங்களில் இது நிகழ்ந்து வந்துள்ளது.

எமது தமிழ் மக்களின் போராட்டத்தின் தர்மத்தன்மைகள், உண்மைத்தன்மைகளை வெளி உலகுக்கு எடுத்துக்கூறும் ஒரு குரலாக இந்த மானுடத்தின் தமிழ்க் கூடல் அமையும் என நான் நம்புகிறேன்.

தமிழ் மக்களின் உணர்வுகளில் கட்டறுத்துப் பாயும் மானுட உணர்வுகள் இந்த உலகில் வெளிக் கொண்டுவரப்படும். இந்த மானுடத்தின் தமிழ்க்கூடல் வெளியுலகிற்கு தமிழ் மக்களின் மானுட உணர்வுகளை எடுத்துக் காட்டுவதாக அமையும் என அவர் தனது தொடக்கவுரையில் தெரிவித்தார்.

## தமிழன் விழிப்பு நிலையில் இருக்கிறான் அவனை யாரும் விழுத்த முடியாது!


### சிறப்புரையில் நிலாந்தன்

(நமது நிருபர்)

நான் ஏழு ஆண்டுகள் வனவாசம் முடித்து வந்திருக்கிறேன். நான் அந்த வனவாசத்தில் பட்ட துன்பங்கள், அந்தக் காயங்களை கடந்து இப்போது இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறேன் என நிலாந்தன் நேற்று மானுடத்தின் தமிழ்க் கூடல்- 2002 மாநாட்டில் சிறப்புரை வழங்கும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது- இந்தச் சமாதானச் சூழலில் நாம் இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம். எழுபதுகளில் ஒரு முறை தமிழ் மாநாடு நடக்கும் போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு பல உயிர்கள் அழிக்கப்பட்டன. அது போல் இப்போது செய்துவிட முடியாது. ஏனெனில் தமிழன் இப்போது பலமானவன். எழுபதுகளில் இருந்த தமிழன் இப்போது இல்லை. அவனுக்கென்று ஒரு பலம் உண்டு. அவன் மிகவும் விழிப்பு நிலையில் இருக்கின்றான். அவனை இனியாரும் வீழ்த்திவிட முடியாது.

யாழ்ப்பாண இடப் பெயர்வின் பின் மிகவும் பலமடைந்திருக்கிறோம். ஒரு பலமான இலக்கியம் எழுந்திருக்கிறது. இடப்பெயர்வுக்கு முன்னான காலத்தில் எழுந்த இலக்கியங்களையும் மீறி சிறந்த இலக்கியங்கள் படைக்கப்பட்டு இருக்கின்றன என நிலாந்தன் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.




## சின்னஞ்சிறு விளம்பரம்

### ஆள் தேவை

மருத்துவமனையில் கடமையாற்றுவதற்கு பெண் தேவை. தங்குமிட வசதி உண்டு. வீட்டுப் பணிப்பெண்ணும் விண்ணப்பம் செய்யலாம். முடிவுதிகதி 31-10-2002 தொடர்பு - விளம்பர இல.01, மே/பா. நமது ஈழநாடு. (016)

### வாடகைக்கு

இல.172 (254), கே.கே.எஸ். வீதியிலுள்ள மாடிக்கடை வாடகைக்கு விடப்படும் தொடர்புகளுக்கு அ.அலக்ஸிஸ், ஓய்வுபெற்ற கிராமசேவையாளர், சமாதான நீதவான், இல. 18, புதுமை மாதா கோவில் கிழக்கு வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2223358 (015)

## வேலைவாய்ப்பு

TITA

நிறுவனத்தினால் முல்லைத்தீவில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கணினிப் பயிற்சி நிலையத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பயிற்சி நிலைய முகாமையாளர்
2. விரிவுரையாளர் (கணினி - அடிப்படை சம்பளம் - 6000/-)
3. கணினி பயிற்றுவிப்பாளர் (அடிப்படை சம்பளம் - 4000/-)

குறிப்பு:-
விண்ணப்பதாரிகள் கணினிமொழி மென்பொருள், வன்பொருள் பற்றி பரீட்சயம் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி நிலையத்தின் வளர்ச்சிக்கும் சமூக விருத்திக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

TITA உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
விண்ணப்பதாரிகள் 20.10.2002க்கு முன் தொடர்புகொள்ளவும்
தொடர்பு - admin@tamilita.org
அல்லது
chairman,TITA
75, Laurence Rd,
Colombo - 4.
மேலதிக விபரத்திற்கு 0777780304
0777322035 (சி-070)


THE TAMIL MEET OF HUMANITY 2002

## மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002

### இரண்டாம் நாள் நிகழ்வுகள் (20.10.2002)

காலை

9.00-10.30
ஈகச் சுடரேற்றல்

விழாச் சுடரேற்றல்
சுரேஸ் பிரேமச்சந்திரன்
சி.சிவமகாராஜா

அமைதி வணக்கம்

வரவேற்புரை
நா.தமிழன்பன்

சிறப்புரை
வெ.இளங்குமரன்

10.30-12.30 அமர்வு : நாவல்
தலைமை: தி.ஞானசேகரன்
கட்டுரையாளர்கள்
செ.யோகராசா
*எண்பதுகளுக்குப் பிற்பட்ட நாவல்களில் ஈழத் தமிழர்களது உரிமைப் போராட்டம்*
செங்கை ஆழியான்
*மானுட விடுதலை நோக்கி ஈழத்து தமிழ் நாவல்கள்(1856-1983)*
குறிப்புரைஞர்
*நந்தி*

12.30-1.30 மதிய இடைவேளை

1.30-3.00 அமர்வு : அரங்கு
தலைமை: குழந்தை ம.சண்முகலிங்கம்
கட்டுரையாளர்கள்
சிதம்பரநாதன்
*உள் + அது காட்டும் அரங்கு*
*சி.ஜெய்சங்கர்*
*பங்கு பற்றல் பண்பாட்டு உருவாக்கத்தில் சமுதாய அரங்கு*
குறிப்புரைஞர்
*க.ரதிதரன்*

3.30-5.00 அமர்வு : மொழிபெயர்ப்பு
தலைமை:-இ.முருகையன்
கட்டுரையாளர்கள்
கந்தையா ஸ்ரீ கணேசன்
*ஈழத்து இலக்கிய மொழி பெயர்ப்புகள் ஆங்கிலம் வழி தமிழுக்கும் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும்*
குறிப்புரைஞர்
ஐ.சாந்தன்

5.00-5.30 சிறப்புரை
பா.செயப்பிரகாசம்
*தமிழ் இலக்கியப் போக்கும் ஒடுக்கப்பட்டோர் இலக்கியமும்*

5.30-5.45 நிறைவுரை
சீ.புலித்தேவன்

6.00-8.00 கலைநிகழ்ச்சி
நாடகம் "அக்கினிப் பெருமூச்சு"
*யாழ்.மாவட்டத்தில் 96-97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற். போனோர் பற்றிய ஆற்றுகை*

எழுத்துரு நெறியாள்கை
தே.தேவானந்த்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குடாநாட்டில் மின் விநியோகம் மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மின்சார விநியோகம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடாநாட்டின் சில பகுதிகளுக்கு இன்னமும் மின்சார விநியோகம் கிடைக்கவில்லை. இவ்வாறான பகுதிகளில் புதிய மின்மார்க்கங்கள் உருவாக்கப்பட்டு மின்விநியோகம் சீர் செய்யப்படவுள்ளது.

இதுவரை காலமும் நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை என்ற காரணத்தால் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்குமான மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. இவ்விடயம் குறித்து தற்போது யாழ்.அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுளளது.

இதனைத்தொடர்ந்து குடாநாட்டில் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத பகுதிகள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விபரங்கள் திரட்டப்பட்டு அப்பகுதிகளுக்கு மின்சார விநியோகம் செய்வதற்கான மதிப்பீடும் தயாரிக்கப்படவிருக்கிறது. இதனைத் தொடர்ந்து இதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (க)

## தமிழ்க்கூடல்.....

ஊடகவியலாளர்களும், போராளிகள், மதகுருமாரும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

தமிழ்க் கூடலில் - தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப புலிகளின் பிரமுகர் பாப்பா ஏற்றிவைத்தார். மாவீரர் ஒருவரின் தந்தையான க.பேரின்பநாதன் ஈகச்சுடர் ஏற்றி வைத்தார். விழாச்சுடரை பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தியும், கவியழகனும் ஏற்றி வைத்தனர். பின் வீரசிங்கம் மண்டபத்தினுள் நிகழ்வுகள் ஆரம்மாகின.

மேடையில் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, பேராசிரியர் கா.சிவத்தம்பி, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட கூட்டுறவு நுகர்ச்சிச் சங்கங்களின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், நிலாந்தன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியின் வரவேற்புரையைத் தொடர்ந்து சீ.வி.கே. சிவஞானம் தலைமையுரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பியினால் தொடக்கவுரையாற்றப்பட்டது. பின்னர் நிலாந்தனால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டதுடன் மானுடத்தின் கூடல் ஆரம்ப அமர்வு நிறைவடைந்தது.

பின்னர் 11.30 மணியளவில் கவிதை அமர்வு இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு சண்முகம் சிவலிங்கம் தலைமை தாங்க, கட்டுரையாளர் சோ.பத்மநாதன் 'ஈழத்துக் கவிதையில் தமிழ், இன, மொழி, உணர்வுக்கான அடித்தளங்கள் 1970 இற்கு முந்திய கால கட்டம் குறித்த ஒரு நோக்கு' என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.

கட்டுரையாளர் சு.வில்வரத்தினம் 'எழுபதுக்குப் பின்னர் ஈழத்துக் கவிதைப் பண்பியல் மாற்றங்கள் தொடர்பான பார்வை' என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.

கவிதை அமர்வின் இறுதியில் ரேவதியினால் குறிப்புரையாற்றப்பட்டதுடன் கவிதை அமர்வு 12.30இற்கு நிறைவுபெற்றது. தொடர்ந்து மதிய போசன இடைவேளை இடம் பெற்றது.

மாலை நிகழ்வுகள் 1.30 மணிக்கு ஆரம்பமாகின. இதில் சிறுகதை அமர்வு நடைபெற்றது. இதற்குச் செம்பியன் செல்வன் தலைமை தாங்கினார். கட்டுரையாளர்கள் தெளிவத்தை ஜோசப், தாமரைச்செல்வி ஆகியோர் 'தேசிய இனப்பிரச்சினையும், ஈழத்துச் சிறுகதைகளும்' என்ற தலைப்பில் உரையாற்றினர்.

கட்டுரையாளர் இராஜ.தர்மராஜா 'விடுதலை நோக்கிய ஈழத்துச் சிறுகதை இலக்கியம்' என்ற கருப்பொருளில் உரையாற்றினார். சிறுகதை அமர்வின் இறுதியில் எஸ்.எல்.எம். ஹனீபா குறிப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து சிறுகதை அமர்வு நிறைவுபெற்றது.

பின்னர் 3.30 மணியளவில் 'குழந்தை இலக்கியம்' என்ற அமர்வு இடம்பெற்றது. இவ்வமர்விற்கு சி.சிவலிங்கராஜா தலைமை தாங்கினார்.

கட்டுரையாளர் சபா.ஜெயராஜா, 'குழந்தை இலக்கியத்தின் உளவியற்தளம். என்ற மையப்பொருளில் உரை நிகழ்த்தினார். செ.யோர்கநாதன், 'ஈழத்துக் குழந்தை இலக்கியம் இன்றும், இனியும்' என்ற மையப் பொருளில் உரைநிகழ்த்தினார். குழந்தை இலக்கிய அமர்வில் இறுதியாக கே. குணநாதன் குறிப்புரை நிகழ்த்தினார். அத்துடன் குழந்தை இலக்கிய அமர்வு நிறைவுபெற்றது.

தொடர்ந்து 5 மணியளவில் கவிஞர் இன்குலாப் சிறப்புரையாற்றினார்.

பின்னர் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழினி நிறைவுரையாற்றியதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இதில் புதுவை அன்பனின் நெறியாள்கையில் உருவான 'கரை தேடும ஓடங்கள்' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002 இன் முதல் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்தன. (லி)

## தமிழ்த்தேசிய....

இனமும் விரும்பினால் பிரிந்து செல்லலாம். சுயநிர்ணய உரிமை என்ற சொல்லுக்கு லெனின் வியாக்கியானம் கொடுத்துள்ளார். அத்துடன் பிரிந்து போகும் உரிமை என்பது எப்படிப்பட்டது?. அதற்கும் அவர் விளக்கம் சொல்கிறார். ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழுகின்றனர். இதில் மனைவி விரும்பினால் பிரிந்து செல்லக்கூடிய நிலையைப் போன்றதுதான் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை ஆகும். இவற்றைப் பற்றி நாம் தமிழ்நாட்டில் பேசினாலும், நீங்கள் தமிழீழத்தில் உங்களுடைய உரிமைகளுக்காகப் போராடினாலும் அது குறுகிய தேசியவாதமாகவே கருதப்படும். நான் உலகில் நடக்கும் அனைத்து உரிமைப் போராட்டங்களையும் நேசிக்கிறேன், அவற்றை வாழ்த்துகிறேன். ஆனாலும் நான் எனது ஊர்க்கரையில் இருந்து பார்க்கும் போது கரையில் வந்து மோதுகின்ற கடல் அலைகள் உங்கள் ஊரில் இருந்து புறப்பட்டு வருகின்றன. அங்கே நின்று காற்றைச் சுவாசித்தேன் என்றால் அது உங்கள் கடலோடு மோதி என் மூச்சோடு வந்து சேரும் காற்றாகத்தான் இருக்கும். இதனால் உங்களின் தேசியத்தையும் போராட்டத் தையும் நேசிக்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் 20 ஆயிரம் ஓட்டங்கள் பெற்றார்



(சென்னை)

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்து வரும் இந்திய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் துடுப்பெடுத்தாடிய சச்சின் டெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 20 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்ற முதலாவது வீரர் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் 16வது ஓட்டத்தைப் பெற்றபோது டெண்டுல்கர் தனது 20 ஆயிரமாவது ஓட்டத்தைப் பெற்றார்.

இதுவரை 102 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின் 162 இன்னிங்ஸ்களில் துப்பெடுத்தாடி 8461 ஓட்டங்களையும், 300 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 11544 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் அதிக ஒட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையும் நிலை நாட்டியுள்ள சச்சின் நேற்று முன்தினம் மேற்கு இந்திய அணிக்கு எதிராக 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முகாம்களையே...

அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். தாங்கள் அமைதி காத்தது மட்டுமல்லாது தமிழ் மக்களையும் புலிகள் அமைதி பேண வைத்துள்ளனர். இவ்வாறு நடக்காது வன்செயல் தொடர்ந்திருந்தால் பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கும். அதனால் சமாதான முயற்சிகள் கூட தவிடு பொடியாகியிருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

அக்கரைப்பற்று அசம்பாவிதங்களின் போது விடுதலைப் புலிகளும் பொலிஸாரும் நடந்துகொண்ட விதம் குறித்து அவர் பாராட்டும் தெரிவித்தார்.

## மட்டுவில் பத்திரகாளி அம்மன் மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு இலுப்பையடி ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட் கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. (10)

## ஊர்காவற்துறை கிளைக்குழுத் தேர்தல்

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறைப் ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அம்பாறை.....

நேற்று அக்கரைப்பற்று பகுதிக்கு விஜயம் செய்திருந்தது.

இந்தக் குழுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த பேணாட் குணதிலக ஆகியோர் அங்கம் வகித்திருந்தனர்.

இக்குழுவினர் அக்கரைப்பற்று கலாசார மண்டபத்தில் நேற்றுக்காலை 11 மணியளவில் நடந்த கூட்டமொன்றில் கலந்துகொண்டனர். இக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திர நேரு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் பாவா, முஸ்லிம் மதத்தலைவர்கள், சர்வதேச கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட - சமாதானத்தை ஏற்படுத்த அனைத்து இன மக்களும் பாடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதுடன், பேச்சுக்களைக் குழப்புவதற்காக எவர் எந்த முயற்சிகளைச் செய்தாலும் சமாதானப் பேச்சுக்கள் தடையின்றி நடக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

கூட்டத்தில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, அக்கரைப்பற்றுப் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தி சமாதான சூழ்நிலையைக் குழப்ப எத்தனித்தவர்களையும், இனி மேல் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவோரையும் உடன் கைது செய்து விசாரணைக்குட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்-முஸ்லிம் இனங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்ட சமாதானக் குழுவொன்றை அமைப்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு பிரஸ்தாபித்திருந்தார்.

## வவுனியா...

சங்கள் என்று கூறப்படும் மக்கள் வாழ் இடங்களை அண்மித்த கிராமங்களில் மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

**தேவை**

பத்திரிகை விநியோகப் பணிக்கு ஆர்வமுள்ளவர்கள் தேவை.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வீடுவீடாக சென்று பத்திரிகை விநியோகம் செய்வதற்கு விருப்பம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

'நமது ஈழநாடு'
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

MURTHY ADVERTISING SERVICE
2789

யாழ். FM ல் விளம்பரம் செய்திட
யாழ்-கொழும்பு பிரயாண ஒழுங்கு செய்திட
ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு ஆட்டோ அமர்த்திட

மூர்த்தி விளம்பர சேவை,
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
போன்:2789

**கைத்தொலைபேசிகள் விற்பனைக்கு**

கைத்தொலை பேசிகள் வீற்பனைக்குண்டு
விலை ரூபா 4300
இரண்டு வருட உத்திரவாதம்
இதற்குரிய அன்ரனாக்களும் செய்து கொடுக்கப்படும்

சிங்கப்பூர் பீடா,
174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்பாக)
T.P No 0777 242416
(C-071)

**மரண அறிவித்தல்களுக்கு 40 வீத விசேட கழிவு**

'நமது ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரமாகும் மரண அறிவித்தல்களுக்கு - விளம்பரக் கட்டணங்களில் 40 சத வீத விசேட கழிவு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம் -பொதுமுகாமையாளர்

## இன்றைய நாள் இனிய நாள்

**20.10.2002 - ஞாயிற்றுக்கிழமை**

**மேடம் :-** தேகசுகக்குறைவு, பண வரவு குறைவு, அயல் உறவு பாதிக்கப்படும், கர்வநிலை உருவாகும், கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**இடபம் :-** தேகசுகம் நன்று, பண வரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, உறவினர் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம்.

**மிதுனம்:-** தேகசுகம் நன்று, பண வரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, பெண்கள் புதிய ஆடைகள் அணிவதில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம்.

**கர்க்கடகம்:-** தேகசுகம் நன்று, பணவரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, உறவினருடன் மகிழ்தல், கலை நிகழ்ச்சியில் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**சிங்கம்:-** தேகசுகக்குறைவு, பணவரவு குறைவு, தேவையற்ற பகை, எதிர்பாராத பயம், கல்வி முன்னேற்றம்.

**கன்னி:-** தேகசுகம் நன்று, பண வரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, சுற்றுலா மகிழ்ச்சி, கலை நிகழ்ச்சியில் மகிழ்வு, கல்வி முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்:-** தேகசுகம் நன்று, பண வரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, பெண்களினால் மகிழ்ச்சி, தெய்வதரிசன பலன், கல்வி சமம்.

**விருச்சிகம்:-** தேகசுகம் நன்று, பணவரவு நன்று, புத்திரர் சுகம், சமய அறிஞர் தரிசனம், வாகன பலன்.

**தனு:-** தேகசுகக் குறைவு, பண வரவு குறைவு, வாகனம் சம்பந்தமான செலவு, உறவினர்கள் செலவு, கல்வி முன்னேற்றம்.

**மகரம்:-** தேகசுகம் நன்று, பண வரவு நன்று, தெய்வ தரிசனம், சுப காரியங்களில் பங்கு, சினேகித மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம்.

**கும்பம்:-** தேகசுகம் சமம், தேவையற்ற செலவு எடுத்த காரியம் தடை, கௌரவக்குறைவு, அயலவரிடம் மௌனம் சாதிக்கவும், கல்வி முன்னேற்றம் குறைவு.

**மீனம்:-** தேகசுகம் நன்று, பண வரவு நன்று, சுற்றுலா மகிழ்ச்சி, நண்பர்கள் வரவு, அறுசுவையுண்டி, ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம்.

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20-10-2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.